# பொது
# விதிகள் மற்றும் நிபந்தனைகள்

HSBC

ஹொங்கொங் அன்ட் ‘ங்காய் பாங்கிங் கோப்பரே‘ன் லிமிட்டட் - ஸ்ரீலங்கா, இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கியாகும்.

இது ஹொங்கொங் அன்ட் ‘ங்காய் பாங்கிங் கோப்பரே‘ன் லிமிட்டட், ஸ்ரீலங்கா.வின் வெளியீடு.

உள்ளடக்க அட்டவணை

**சகல கணக்குகளுக்கும்**

பிரவேச நிபந்தனைகள்

வைப்புக்கள்

காலமுறை விபரக்கூற்றுகள்

**தற்போதுள்ள கணக்குப் புத்தக சேமிப்புக் கணக்குகளுக்கு மட்டும்**

பொது

கணக்குப் புத்தகச் சேமிப்பிலிருந்து மீளப்பெறுகை

**விபரக்கூற்றுச் சேமிப்புக் கணக்குகளுக்கு மட்டும்**

கணக்கை ஆரம்பித்தல்

வட்டி

**நடைமுறைக் கணக்குகளுக்கு மட்டும்**

கணக்கை ஆரம்பித்தல்

காசோலைப் புத்தகங்கள்

மீளப்பெறுகைகள்

**ஒழுங்குபடுத்தல் கணக்குகள் மாத்திரம்**

**கால வைப்புக்களுக்கு மட்டும்**

கணக்கை ஆரம்பித்தல்

மீளப்பெறுகைகள்

வட்டி

**சகல கணக்குகளுக்குமான பொது விதிகள் மற்றும் நிபந்தனைகள்**

பொதுவசதிக் கட்டணக் கொடுப்பனவுகள்

அழைப்பு நிலைய சேவைகள் மற்றும் அழைப்பு நிலையச் சேவை இழப்பெதிர்காப்பு

தொலைபேசி வங்கிச் சேவையும் இழப்பெதிர்காப்பும்

வரிகள்

ஆளுகைச் சட்டம் மற்றும் நியாயாதிக்கம் பொருத்தமுடைய ஏனைய பொதுச் சரத்துக்கள்

ஏனைய ஏற்புடைய பொதுச் சரத்துகள்

நிபந்தனைகளுக்கான திருத்தங்களும் ஏற்றுக்கொள்ளுதலும்

த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட்டில் பேணப்படும் இலங்கை ரூபாயிலான சேமிப்புக் கணக்குகள், நடைமுறைக் கணக்குகள் மற்றும் கால வைப்புக் கணக்குகள் அனைத்தும் பின்வரும் விதிகள் மற்றும் நிபந்தனைகளினால் ஆளுகை செய்யப்படும்.

த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட் என்பது இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கியாகும்.

HSBC கணக்கு வைப்பாளர்(கள்) (சந்தர்ப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ப இனிமேல் 'கணக்கு வைப்பாளர்(கள்)', 'வாடிக்கையாளர்(கள்)', 'நீங்கள்', 'உங்கள;', 'உங்களது' என்றும் குறிப்பிடப்படும் இச் சொற்பிரயோகம் கணக்கு வைப்பாளரின் (வைப்பாளர்களின்) வாரிகள், நிர்வாகிகள், நிறைவேற்றுநர்கள் மற்றும் சட்டபூர்வமான பிரதிநிதிகளையும் உள்ளடக்கும்) வங்கி அலுவல்கள், முதலீடு, நிதி மற்றும் ஏனைய கொடுக்கல் வாங்கல்கள், பல்வேறு தன்மையான வர்த்தக அலுவல்கள் என்பவற்றை மேற்கொள்ளும் நோக்கத்திற்காகவும் HSBC மற்றும்/அல்லது HSBC குழும அங்கத்தவர்களிடமிருந்து சேவைகள், வசதிகள், தகவல்கள், பண்டங்கள், அனுகூலங்கள் மற்றும் சலுகைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காகவும் HSBCக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதற்கும் அதனுடன் தொடர்பாடல் செய்வதற்கும் இடமளிக்கும் வகையில், த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட் (சந்தர்ப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ப இனிமேல் 'HSBC', 'வங்கி', 'நாம;', 'எமது' என்றும் குறிப்பிடப்படும் இச் சொற்பிரயோகம் அதன் அடுத்துறுனர்கள் மற்றும் சாட்டுனர்களையும் உள்ளடக்கும்) இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக, காலத்திற்குக் காலம், வங்கிச் சேவைகள், வசதிகள் மற்றும் தகவல்களை வழங்கும்.

கணக்கு வைப்பாளர்(கள்) பயன்படுத்தும் அல்லது எம்மிடம் கோரும் அல்லது நாம் அவருக்கு.∴அவர்களுக்கு வழங்கும் வங்கிச் சேவைகள், வசதிகள் மற்றும் தகவல்கள் தொடர்பாக கணக்கு வைப்பாளரின் (வைப்பாளர்களின்) பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் யாவும் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் (அவை இனிமேல் குறித்துரைக்கப்படும்) விபரிக்கப்பட்டுள்ளன.

மேலே "HSBC" எனவும் ''கணக்கு வைப்பாளர்(கள்);'' எனவும் குறிப்பிடப்பட்டுள்ள சொற்பிரயோகங்கள் சில சமயங்களில் இந்த ஒப்பந்தத்தின் (இது இனிமேல் குறித்துரைக்கப்படும்) ''தரப்புக்கள்'' என்று கூட்டாகவும் ''தரப்பு'' என்று தனித்தனியாகவும் பயன்படுத்தப்படலாம்.

**வரைவிலக்கணங்கள்:**

இந்த விதிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள சிறப்புப் பதங்கள், சந்தர்ப்பத்தினால் வேறு விதமாக தேவைப்படுத்தப்படாவிடின், பின்வரும் அர்த்தங்களைக் கொண்டிருக்கும்.

''கணக்கு வைப்பாளர்(கள்)'' 'நீங்கள்', 'உங்கள்', 'உங்களது', 'வாடிக்கையாளர்' என்றும் குறிப்பிடப்படும்) என்ற சொற்பிரயோகம் HSBCஇல் ஆரம்பிக்கப்பட்டுப் பேணப்படும் முதலாவது கணக்கின் விண்ணப்பப் படிவத்தில் பெயரிடப்பட்டுள்ள கணக்கு வைப்பாளரை (வைப்பாளர்களை) குறிக்கும்.

**"ஒப்பந்தம்"** என்பது இனிமேல் குறிப்பிடப்படவிருப்பனவும் இந்த ஒப்பந்தத்தின் விதிகளுக்கு அமைய, காலத்திற்குக் காலம் மாற்றம் செய்யப்படக்கூடியனவுமான விதிகள், ஒப்பந்தத்தின் ஒரு பகுதியான சேவைகளின் வழங்கல்கள் தொடர்பில் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் ஏதேனும் மேலதிக விதிகள் ஆகிய அனைத்தையும் குறிக்கும்.

**"ஏரீஎம்" (ATM/s)** என்பது, தன்னியக்க ரெலர் பொறிகளைக் குறிப்பீடுசெய்யும். இந்நியதிநிபந்தனைகளில் தன்னியக்க ரெலர் பொறி பற்றிய குறிப்பீடு, அட்டையைப் பயன்படுத்துவதனூடாகத் தொழிற்படுத்தப்படக் கூடிய வலையமைப்பொன்றின் பாகமாகவமைகின்ற (அட்டை எந்நாட்டில் வழங்கப்பட்டதோ அந்நாட்டினுள்ளே அல்லது அதற்கு வெளியே) ஏதேனும் ஒத்த பொறியை உள்ளடக்கும்.

**"**அதிகார அமைப்புக்கள்**"** என்பது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு பகுதியின் மீது நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கும் ஏதேனும் நீதித்துறை, நிர்வாக அல்லது ஒழுங்குபடுத்தல் அமைப்பு, ஏதேனும் அரசாங்கம் அல்லது அரசாங்க முகவரகம், கருவியகம் அல்லது அதிகார சபை, ஏதேனும் வரி அதிகார சபை, பிணையங்கள் பரிவர்த்தனை, நீதிமன்றம், மத்திய வங்கி அல்லது சட்ட அமுலாக்க அமைப்பு அல்லது அவற்றின் ஏதேனுமொரு முகவரகத்தைக் குறிக்கும்.

"வங்கிச் சேவை நாள்" / "வழமையான வங்கிச் சேவை நேரம்" மற்றும் "வேலை நாள்/நேரம்" என்பன, எம்மால் வேறு விதமாகக் குறித்துரைக்கப்படாவிடின், ஒரு வங்கிச் சேவை/வேலை நாள் மற்றும் வழமையான வங்கிச் சேவை/வேலை நேரத்தைக் குறிக்கும்.

“அட்டை வைத்திருப்பவர்” என்பது, HSBCயுடன் வைத்திருக்கப்பட்ட கணக்கொன்றன் மீது HSBCயினால் பற்று அட்டை வழங்கப்பட்ட ஆளொருவரைக் குறிப்பீடு செய்யும். அட்டை வைத்திருப்பவர் ஒன்றில் தனிக் கணக்கு வைத்திருப்பவராக அல்லது கூட்டுக்கணக்கைப் பொறுத்தவரையில் தனியாகச் செயலாற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரராக இருத்தல் வேண்டும்.

“இணக்கக் கடப்பாடுகள்” என்பது பின்வருவனவற்றிற்குப் பணிந்தொழுக HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவர் கொண்டுள்ள கடப்பாடுகளைக் குறிக்கும்: (a) பொருத்தமான ஏதேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நியதி, சட்டம், பிரமாணம், கட்டளைச்சட்டம், விதி, தீர்ப்பு, ஆணை, தன்னார்வக் குறிப்புரை, பணிப்புரை, தடையுத்தரவு, நீதிமன்றக் கட்டளை, HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கும் அதிகார சபை ஒன்றிற்கும் இடையிலான ஒப்பந்தம், HSBCக்கு அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்குப் பிரயோகிக்கக்கூடிய விதத்தில் அதிகார சபைகளுக்கு இடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை (‘சட்டங்கள்’), அல்லது சர்வதேச வழகாட்டுதல்கள் மற்றும் உள்நாட்டுக் கொள்கைகள் அல்லது நடைமுறைகள். (b) அதிகார சபைகளினால் கோரப்படும் ஏதேனும் (நியாயமான) அறிக்கையிடல், ஒழுங்குபடுத்தல் வர்த்தக அறிக்கையிடல், வெளிப்படுத்தல் கோரிக்கைகள் மற்றும் சட்டப்படியான ஏனைய கடப்பாடுகள். (c) வாடிக்கையாளர்களின் அடையாளத்தை உறுதிசெய்வதற்கு HSBCஐ தேவைப்படுத்தும் சட்டங்கள்.

“இரகசியத் தகவல்கள்” என்பது வாடிக்கையாளர் தகவலை வெளியிடும்போது இரகசியமானது என்று குறிப்பிடும் தகவல்களை அல்லது நியாயமான ஒருவரினால் இரகசியமானது, பகிரங்கமற்றது மற்றும் தனியுரிமத் தன்மையுடையது என்று கருதப்படும் தகவல்களைக் குறிக்கும்.

“இணைக்கப்பட்ட நபர்” என்பது சேவைகளின் வழங்கல் தொடர்பாக HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கு வாடிக்கையாளரினால் வழங்கப்படும் அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவரினால் வேறு வழியில் பெற்றுக்கொள்ளப்படும் தகவல்களுக்குரிய (இதில் தனிப்பட்ட விபரங்கள் அல்லது வரித் தகவல்களும் உள்ளடங்கும்) ஒரு நபரை அல்லது நிறுவனத்தைக் குறிக்கும். வாடிக்கையாளரைப் பொறுத்தவரையில், இணைக்கப்பட்ட நபர் என்பது வாடிக்கையாளரின் எவரேனுமொரு பிணையாளி, கம்பனியொன்றின் பணிப்பாளர் அல்லது அதிகாரி, பங்காளித்துவத்தின் பங்காளிகள் அல்லது உறுப்பினர்கள், ‘‘கணிசமான உரிமையாளர்’’, ‘‘கட்டுப்படுத்தும் நபர்’’, அல்லது பயனடையும் உரிமையாளர், அறக்காவலர், நம்பிக்கைப் பொறுப்பொன்றின் தீர்ப்பனவாளர் அல்லது பாதுகாவலர், குறித்துரைக்கப்பட்ட

கணக்கொன்றை வைத்திருப்பவர், குறித்துரைக்கப்பட்ட கொடுப்பனவொன்றைச் செலுத்துபவர், வாடிக்கையாளரின் பிரதிநிதி, முகவர் அல்லது நியமத்தர், அல்லது வாடிக்கையாளர் HSBC குழுமத்துடன் கொண்டிருக்கும் வங்கி உறவுகள் தொடர்பாக வாடிக்கையாளருடன் தொடர்புகளை வைத்திருக்கும் வேறு நபர்கள் அல்லது நிறுவனங்களையும் உள்ளடக்கலாம்.

**"**கட்டுப்படுத்தும் நபர்கள்**"** என்பது பொதுவாக, ஒரு நிறுவனத்தின் மீது கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கும் நபர்களைக் குறிக்கும். (நம்பிக்கைப் பொறுப்பகம் ஒன்றைப் பொறுத்தவரையில் அதன் தீர்ப்பனவாளர், நம்பிக்கைப் பொறுப்பாளர், பாதுகாவலர், பயனடைபவர் அல்லது பயனடையும் பிரிவினர் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பகத்தின் மீது தீர்க்கமான இறுதிக் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கும் வேறேதும் நபர்கள் இதில் உள்ளடங்குவர். நம்பிக்கைப் பொறுப்பகம் அல்லாத ஒரு சட்டபூர்வ நிறுவனமாயின், சமமான அல்லது ஒத்தியல்பான கட்டுப்பாட்டு நிலையில் உள்ளவர்களை இச் சொற்றொடர் குறிக்கும்).

**"**வாடிக்கையாளர் தகவல்**"** என்பது வாடிக்கையாளரின் அல்லது இணைக்கப்பட்ட நபரின் தனிப்பட்ட விபரங்கள், இரகசியத் தகவல்கள் மற்றும்/அல்லது வரித் தகவல்களைக் குறிக்கும் (இணைக்கப்பட்ட அறிக்கைகள், விலக்களிப்புக்கள் மற்றும் ஒப்புதல்களும் இதில் உள்ளடங்கும்).

**"**பற்று அட்டை**"** **(Debit Card)** அல்லது **"**அட்டை**"** என்பது, தோதானவாறு, அட்டை வைத்திருப்பவரொருவருக்கு HSBCயினால் வழங்கப்பட்ட உள்நாட்டில்/சர்வதேச ரீதியில் செல்லுபடியாகும் பற்று அட்டை என்று பொருளாகும்.

**"ESPM/s"** என்பது வங்கியின் இலகு கொடுப்பனவு இயந்திரங்களை (EasyPay Machines) குறிக்கும்.

**"**நிதிசார் குற்றம்**"** என்பது பணம் தூயதாக்கல், பயங்கரவாதத்திற்கு நிதி வழங்குதல், இலஞ்சம், ஊழல், வரி ஏய்ப்பு, மோசடி, பொருளாதார அல்லது வர்த்தகத் தடைகளை மீறுதல் மற்றும்/அல்லது இந்த விடயங்கள் தொடர்பான சட்டங்களை மீறுதல் அல்லது மீறுவதற்குத் தந்திரமாக முயற்சி செய்தல் என்பவற்றைக் குறிக்கும்.

"**HSBC"** ('வங்கி', 'நாம்', 'எமது') என்பது, ஹொங்கொங் SARஇலும் அதன் சட்டங்களின் கீழும் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு வங்கித் தொழில் கூட்டுத்தாபனமாகவும், ஹொங்கொங், மத்திய குவீன்ஸ் வீதியில் 1ஆம் இலக்கத்தில் அதன் பதிவுசெய்யப்பட்ட

அலுவலகத்தைக் கொண்டுள்ளதும், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசில், கொழும்பு 1, சேர் பாரன் ஜயதிலக்க மாவத்தை 24ஆம் இலக்கத்திலும் வேறிடங்களிலும் உள்ள அதன் கிளை அலுவலகங்கள் முன்சொல்லப்பட்ட குடியரசில் தொழிலை நடத்துகின்றதுமான வரையறுக்கப்பட்ட ஹொங்கொங் அன்ட் ஷங்காய் வங்கித் தொழிற் கூட்டுத்தாபனத்தைக் குறிக்கும். "HSBC" அல்லது "வங்கி"; அத்துடன் அதன் அடுத்துறுபவர்களையும் சாட்டுதற்காரர்களையும் உள்ளடக்கும்.

**"HSBC** குழுமம்**"** என்பது HSBC ஹோல்டிங்ஸ் பி.எல்.சி. மற்றும்/அல்லது அதன் இணை நிறுவனங்கள், உப நிறுவனங்கள் மற்றும் அவற்றின் ஏதேனும் கிளைகள் அல்லது அலுவலகங்களைக் குறிக்கும். **HSBC** குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவர்**"** என்பதும் இதே அர்த்தத்தைக் கொண்டிருக்கும்.

**"**தகவல்**"** என்பது கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) எம்மால் அல்லது ஏதேனும் தகவல் வழங்குநரினால் வழங்கப்படும் ஏதேனும் நிதி, சந்தை அல்லது வேறேதும் தகவல்களையும் தரவுகளையும் குறிக்கும்.

**"**தகவல் வழங்குநர்**"** என்பது HSBC தவிர்ந்த தகவல் வழங்கும் ஏனைய நபர் எவரையும் குறிக்கும். தகவல் வழங்குநருக்குத் தகவல் வழங்குபவரும் இதில் உள்ளடக்கப்படுவார்கள்.

**"**நிறுவனம்**"** என்பது இந்த ஒப்பந்தத்தின் நோக்கத்திற்கு, ஒரு நிறுவனமாகக் கருதப்பட வேண்டுமென கணக்கு வைப்பாளரினால் (வைப்பாளர்களினால்) HSBCக்கு அறிவிக்கப்பட்ட ஏதேனும் மூன்றாம் தரப்பு நிதி நிறுவனத்தைக் குறிக்கும்.

**"**அறிவுறுத்தல்**"** என்பது கணக்கு வைப்பாளரினால் (வைப்பாளர்களினால்) அனுப்பப்பட்டு HSBCக்கு கிடைக்கப்பெறும் முறைப்படி அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் எழுத்துமூல வேண்டுகோளை அல்லது அறிவுறுத்தலைக் குறிக்கும்.

**"**சர்வதேசக் கொடுக்கல் வாங்கல்கள்**"** என்பது, இலங்கைக்கு வெளியேயுள்ள HSBCயிலிருந்து அட்டை வைத்திருப்பவரினால் செய்யப்படும் எல்லாக் கொடுக்கல் வாங்கல்களையும் குறிப்பீடு செய்யும்.

"கூட்டுக் கணக்கு வைப்பாளர்/கள்" என்பது கூட்டுக் கணக்கை வைத்திருப்பவர்களைக் கூட்டாகவும் தனித்தனியாகவும் குறிக்கும்.

**“**இழப்பு**”** என்பது ஏதேனும் உரிமைக் கோரல், அறவீடு, செலவு (ஏதேனும் சட்ட மற்றும் நிபுணத்துவ சேவைக்கான செலவுகளும் உள்ளடங்கும்), சேதங்கள், கடன், செலவினம், வரி, பொறுப்புக்கள், கடப்பாடுகள், குற்றச்சாட்டுக்கள், வழக்கு, நடவடிக்கை, கோரிக்கை, வழக்கு விசாரணை அல்லது தீா்ப்புக்களைக் குறிக்கும். இவை எவ்வாறு கணிக்கப்பட்டவையாகவும் நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில், எதிர்விளைவாக, தண்டனையாக அல்லது தற்செயலாக ஏற்பட்டவையாகவும் இருக்கலாம்.

‘‘வணிகத் தாபனங்கள்’’ என்பது, பற்று அட்டைக்கு மதிப்புக் கொடுக்கின்றவையும், உலகெங்கும் அமைந்துள்ளவையுமான தாபனங்கள் என்று பொருளாகும். இந்த வரைவிலக்கணத்திற்குள் HSBCயினால் அல்லது விசா (VISA) வோ்ல்ட்வைட் பிறைவேட் லிமிட்டட்டினால் விளம்பரப்படுத்தப்பட்ட விற்பனை நிலையங்கள், கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், விமானச்சேவை நிறுவனங்கள் என்பனவும் (ஆனால், அவை மட்டுமல்ல) உள்ளடங்கும்.

**“**கடவுச்சொல்**”** என்பது தொலைபேசி வங்கிச் சேவை மற்றும் தனிப்பட்ட இணையத்தள வங்கிச் சேவை ஊடாக அல்லது ATM அட்டை மற்றும் கிறெடிட் கார்ட் உள்ளடங்கலான டெபிற் கார்ட்களின் மூலம் அறிவுறுத்தல்களைப் பெறுவதற்கு அல்லது செயற்படுத்துவதற்கும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கும் பயன்படுத்துவதற்காக வங்கியினால் கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளா்களுக்கு) வழங்கப்பட் ஏதேனும் இரகசியச் சொல், சொற்றொடர் மற்றும் அல்.்.பா எண்களைக் கொண்ட இலக்கத்தைக் குறிக்கும்.

**“**தனிப்பட்ட விபரம்**”** என்பது ஒரு நபரை அடையாளம் காண்பதற்கு உதவக்கூடிய வகையில் அந்த நபா் (மற்றும் தரவு இரகசியச் சட்டம் நிறுவனங்களுக்குச் செல்லுபடியாகும் நாடுகளிலுள்ள நிறுவனங்கள்) தொடா்பான விபரங்களைக் குறிக்கும். இந்த விபரங்களுள் பெயா்(கள்), வசிப்பிட முகவரி(கள்), தொடா்பு விபரங்கள், வயது, பிறந்த திகதி, தேசிய இனம், பிரஜாவுரிமை, விவாக நிலை போன்றவையும் உள்ளடங்கும்.

**“**தனிப்பட்ட இணையத்தள வங்கிச் சேவை **(PIB)”** என்பது அறிவுறுத்தல்களைப் பெறுவதற்கு அல்லது செயற்படுத்துவதற்கும் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கும் HSBCஇன் உத்தியோகபூா்வ இணைய வலைத்தளத்தின் ஊடாக வழங்கப்படும் இணையத்தள துழைவாயிலை (Portal) குறிக்கும்.

"பிரதான கணக்கு" என்பது, பற்று அட்டையுடன் இணைந்த பல்வகைக் கணக்குகளின் விடயத்தில், முக்கிய/முதலாவது தொழிற்பாட்டுக் கணக்கென, அதாவது, பற்று அட்டை தொடர்பான கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள், விதிப்பனவுகள் மற்றும் கட்டணங்கள் அதிலிருந்து பற்றுவைக்கப்படும் கணக்கு என்று பொருளாதல் வேண்டும்.

"சேவைகள்" என்பது, வரையறையின்றி, (a) வாடிக்கையாளரின் வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல், செயற்படுத்துதல் மற்றும் மூடுதல், (b) வாடிக்கையாளருக்குக் கடன் வசதிகள் மற்றும் ஏனைய வங்கி வசதிகளையும் சேவைகளையும் வழங்குதல் (பிணையங்களின் கையாளுகை, முதலீட்டு ஆலோசனை, தரகு, முகவர், பாதுகாவலர், கிளியரிங் அல்லது தொழில்நுட்பக் கொள்முதல் சேவைகளும் இதில் உள்ளடங்கும்), விண்ணப்பங்களைப் பரிசீலித்தல், துணைக் கடன் மதிப்பீடு மற்றும் வங்கி வசதிக்கான தகுதி மதிப்பீடு, (c) வாடிக்கையாளருடன் HSBC பேணும் ஒட்டுமொத்த உறவுகள் (சந்தைப்படுத்தல் அல்லது நிதிச் சேவைகளின் ஊக்குவிப்பு அல்லது வாடிக்கையாளருக்கான தொடர்புடைய வங்கி வசதிகள், சந்தை ஆய்வு, காப்புறுதி, கணக்காய்வு மற்றும் நிர்வாக நோக்கங்கள் ஆகியவற்றைக் குறிக்கும்.

"விபரக்கூற்று" என்பது ஏதேனும் காலப்பகுதியில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் (பற்று அட்டைக் கொடுக்கல் வாங்கல்களும் உள்ளடங்கும்) விபரங்கள், கணக்கு மீதி என்பவற்றை எடுத்துக்காட்டும் விதத்தில் காலத்திற்குக் காலம் கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) வழங்கப்படும் கணக்கு அறிக்கையைக் குறிககும். HSBC பொருத்தமெனக் கருதும் வேறு தகவல்களும் இதில் சேர்க்கப்படலாம்.

"கணிசமான உரிமையாளர்கள்" என்பது ஒரு நிறுவனத்தில் 10%க்கு மேற்பட்ட இலாபத்திற்கான உரிமையை அல்லது 10%க்கு மேற்பட்ட பங்கை நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் கொண்டுள்ளவர்களைக் குறிக்கும்.

"வரி அதிகாரசபைகள்" என்பது உள்நாட்டு அல்லது வெளிநாட்டு வரி, வருமான, நிதி மற்றும் நாணய அதிகார சபைகளைக் குறிக்கும்.

"வரித் தகவல்கள்" என்பது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவர் ஏதேனும் வரி அதிகார சபைக்கான தனது கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு (அல்லது பணிந்துதொழுகலை நிருபிப்பதற்கு அல்லது பணிந்தொழுகாமையைத் தவிர்ப்பதற்கு) அவசியமென HSBC நியாயமான

முறையில் கருதும் விதத்தில் வாடிக்கையாளரின் (அந்த வாடிக்கையாளர் ஒரு தனிநபராக, வியாபாரமாக அல்லது இலாபம் கருதாத அல்லது வேறு வகையான நிறுவனமாக இருக்கலாம்), அல்லது வாடிக்கையாளர் ஒருவரின் எவரேனும் உரிமையாளரின், ''கட்டுப்படுத்தும் நபரின்'', ''கணிசமான உரிமையாளரின்'', பயனடையும் உரிமையாளரின் வரி நிலைமையுடன் நேரடியாக அல்லது நேரடியற்ற முறையிலி தொடர்புடைய ஏதேனும் ஆவணங்கள் அல்லது தகவல்களைக் (அத்துடன் இணைக்கப்பட்ட அறிக்கைகள், விலக்களிப்புக்கள் மற்றும் ஒப்புதல்களும் உள்ளடங்கும்) குறிக்கும்.

**"**வரித் தகவல்கள்**"** என்பதில் வரி வசிப்பிடம் மற்றும்/அல்லது நிறுவனத்தின் அமைவிடம் (பொருத்தமாயின்), வரி வாழிடம், வரி அடையாள இலக்கம், வரிச் சான்றிதழ் படிவங்கள், சில தனிப்பட்ட தரவுகள் என்பவற்றைக் குறிக்கும். (பெயர்(கள்), வசிப்பிட முகவரி(கள்) வயது, பிறந்த திகதி, பிறந்த இடம், தேசிய இனம், பிரஜாவுரிமை) என்பனவும் உள்ளடங்கும்).

**"**வரிச் சான்றிதழ் படிவங்கள்**"** என்பது கணக்கு வைத்திருப்பவரின் அல்லது நிறுவனமொன்றுடன் இணைக்கப்பட்டுள்ள நபரின் வரி நிலைமையை ஊர்ஜிதம் செய்வதற்காக, காலத்திற்குக் காலம், வரி அதிகார சபை ஒன்றினால் அல்லது HSBCயினால் வழங்கப்படும் அல்லது தேவைப்படுத்தப்படும் ஏதேனும் படிவங்களை அல்லது வேறு ஆவணங்களைக் குறிக்கும்.

ஒருமையில் குறிப்பிடப்பட்டுள்ளவை பன்மை அர்த்தத்தையும் பன்மையில் குறிப்பிடப்பட்டுள்ளவை ஒருமை அர்த்தத்தையும் உள்ளடக்கும்.

**"**விதிகள் மற்றும் நிபந்தனைகள்**"** என்பது இந்த ஒப்பந்தத்தை ஆட்சி செய்யும் விதிகள் மற்றும் நிபந்தனைகள், ஏதேனும் கைதுறப்புகள், இணைய வலைத்தள இரகசிய அறிக்கைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் அவை காலத்திற்குக் காலம் திருத்தம் செய்யப்படும்போது கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) எம்மால் அறிவிக்கப்படும் ஏதேனும் மேலதிக விதிகள் என்பவற்றைக் குறிக்கும்.

**"**கொடுக்கல் வாங்கல்**"** என்பது கணக்குகள் தொடர்பில் அனுமதிக்கத்தக்க நடவடிக்கைகளை HSBC எடுப்பதற்காக வாடிக்கையாளர் ஒருவரினால் எழுத்து மூலம் அல்லது பற்று அட்டை மூலம் HSBCக்கு வழங்கப்படும் அனுமதிக்கத்தக்க அறிவுறுத்தலைக் குறிக்கும் (பண மீளப்பெறுகைகள், விற்பனை ஸ்தானத்திலான கொடுப்பனவுகள், பண/காசோலை வைப்புக்கள் முதலியன கொடுக்கல் வாங்கலுக்கு உதாரணங்களாகும்).

“நீர்”, “உமது”, ‘‘அவர்’’ என்னும் பதங்களை அல்லது அவற்றையொத்த குறிப்புப் பெயர்ச்சொற்களைப் பயன்படுத்துதலானது, சந்தர்ப்பம் அவ்வாறு அனுமதிக்குமிடத்து, ஏற்புடையற்பாலவாறு, கணக்கு வைத்திருப்பவர் அல்லது அட்டை வைத்திருப்பவர் என்று பொருளாதல் வேண்டும். ஆண்பாலிலான எல்லாக் குறிப்பீடுகளும் பெண்பாலையும் உள்ளடக்கும்.

“வீசா” (VISA) என்பது, வீசா வேர்ல்ட்வைட் பிறைவேட் லிமிட்டட்டுக்குச் சொந்தமான ஒரு சின்னமாகும்.

“வீசா ஏரீஎம் வலையமைப்பு” (VISA ATM Network) என்பது, பற்று அட்டைகளுக்கு மதிப்புக் கொடுக்கின்றவையும், விசா அல்லது இலத்திரன் சின்னங்களை வெளிக்காட்டுகின்றவையுமான ATM களை குறிக்கும்.

**சகல கணக்குகளுக்கும்**

1. பிரவேச நிபந்தனைகள்

1.1 வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க அடையாள ஆவணங்கள் (உதா: தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு முதலியன), வசிப்பிட முகவரியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் என்பன ஊர்ஜிதம் செய்யப்படுவதன் பேரில் வங்கியினால் அங்கீகரிக்கப்படும் நபர்/நபர்கள், சேமிப்புக் கணக்கை, நடைமுறைக் கணக்கை அல்லது கால வைப்புக் கணக்கை ஆரம்பிக்க முடியும்.

1.2 சேமிப்புக் கணக்கு(கள்) நடைமுறைக் கணக்கு(கள்) அல்லது கால வைப்புக் கணக்கு(கள்) (இனிமேல் ‘‘கணக்கு’’ அல்லது கூட்டாகக் ‘‘கணக்குகள்’’ என்று குறிப்பிடப்படும்) பின்வருபவர்களினால் ஆரம்பிக்கப்படலாம்:

1.2.1 ஒரு தனி நபர் தனது பெயரில் ஆரம்பிக்கலாம்.

1.2.2 இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் கூட்டாகத் தமது பெயர்களில் ஆரம்பிக்கலாம். கணக்கு வைப்பாளரினால் (வைப்பாளர்களினால்) வழங்கப்பட்ட அதிகாரமளிப்பிற்கேற்ப, கணக்கு மீதியானது அவர்களில் ஒருவருக்கு அல்லது அனைவருக்கும் வழங்கப்படலாம்.

1.3 ஒவ்வொரு கணக்கிற்கும் ஒரு தனித்துவமான இலக்கம் வழங்கப்படும். வங்கியுடனான சகல கடிதத் தொடர்புகளிலும் சகல கொடுப்பனவுச் சீட்டுக்களிலும் மீளப்பெறுகைப் படிவங்களிலும் இந்த இலக்கம் குறிப்பிடப்பட வேண்டும்.

1.4 ஒவ்வொரு கணக்கும் அதற்குரிய குறைந்தபட்ச மீதித் தொகை நிபந்தனையைக் கொண்டிருக்கும். இத் தொகை காலத்திற்குக் காலம் மாற்றப்படலாம். இம் மாற்றம், இலங்கையிலுள்ள HSBC கிளைகளில் வைக்கப்படும் விளம்பரங்கள் மற்றும்/அல்லது www,hsbc.lk என்ற வங்கியின் வலைத்தளம் மூலம் கணக்கு வைப்பாளர்களுக்கு அறிவிக்கப்படும். அறிவிக்கப்பட்ட குறைந்தபட்ச தொகையை கணக்கு வைப்பாளர்(கள்) பேணாவிட்டால், அக் கணக்குகள் தொடர்பில் கொடுக்கல் வாங்கல் கட்டணங்கள் மற்றும்/அல்லது சேவைக் கட்டணங்களை வங்கி அறவிட முடியும். நடைமுறையிலுள்ள வங்கியின் கட்டணப் பட்டியலின் அடிப்படையில் இக் கட்டணங்கள் அறவிடப்படும்.

1.5 ஆரம்பிக்கப்படும் சகல வெளிநாட்டு நாணயக் கணக்குகளும் இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைககப்பட்ட நாணயத்தில் (அல்லது நாணயங்களில்) இருப்பதுடன், வங்கியின் உள்ளகக் கொள்கைகளுக்கு அமைவாகவும் இருக்கும்.

1.6 வங்கிக் கணக்கில் பற்று வைத்துக் கொடுப்பனவுகளைச் செய்ய வேண்டுமாயின், வங்கிக்கு வழங்கப்பட்ட அதிகாரமளிப்பிற்கு அமைவாக கணக்கு வைப்பாளரிடம் (வைப்பாளர்களிடம்) இருந்து பெறப்படும் உறுதிப்படுத்தப்பட்ட எழுத்துமூல அறிவுறுத்தல்களின் (நிலையான அறிவுறுத்தல்களும் உட்படும்) பேரில் மாத்திரமே வங்கி செயற்படும்.

1.7 வாடிக்கையாளர் வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்காத பட்சத்தில், தொலைநகல் அல்லது வேறேதும் இலத்திரனியல் ஊடகம் மூலமான அறிவுறுத்தல்களின் பேரில் வங்கி செயற்படாது. அத்துடன், இந்த வசதி வங்கியின் தற்றுணிபின் பேரில் மட்டுமே வழங்கப்படும்.

## 2. வைப்புக்கள்

2.1 வைப்புக்களை விரும்பிய வேளைகளில் எத்தனை தடவைகளும் மேற்கொள்ள முடியும். டெலர் கருமபீடங்களில் மேற்கொள்ளப்படும் சகல வைப்புக்களும் வைப்புச் சீட்டில் அச்சிடப்படும் உறுதிப்படுத்தல் அடையாளத்தின் மூலம் அல்லது வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரின் கையொப்பத்தின் மூலம் உறுதி செய்யப்படும்.

2.2 வங்கியின் பெயரில் எழுதப்படாத வெளிநாட்டு நாணய வரைவுகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுக் கட்டளைகளை கொள்வனவு செய்வதா அல்லது சேகரிப்புக்கு அனுப்புவதா என்பதை வங்கி தனது சுயவிருப்பின் பேரில் தீர்மானிக்கும். கொள்வனவு செய்யப்படும் ஆவணங்கள், கொடுப்பனவு செய்யும் வங்கியினால் பின்னர் நிராகரிக்கப்படும் பட்சத்தில், அவை தொடர்பாக இழப்பீடு (அறவீடுகள் உட்பட) பெறும் உரிமை வங்கிக்கு உண்டு. நிராகரிப்பு அறிவித்தல் வங்கிக்குக் கிடைத்தவுடன் இந்த அறவீடு கணக்கில் பற்று வைக்கப்படும்.

2.3 கணக்கில் வைப்புச் செய்யப்படும் காசோலைகள் சேகரிப்புக்காக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். செலுத்தும் வங்கியினால் அக் காசோலைகள் அங்கீகரிக்கப்படும் வரை பணத்தை மீளப்பெற முடியாது. பணம் கிடைக்கும் திகதி வெறும் குறிப்பிற்காக மட்டுமே காட்டப்படும். இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் எவ்வாறு இருந்தாலும், காசோலைகளைச் சேகரிக்கும் மற்றும் அங்கீகரிக்கும் நோக்கத்திற்கு சேமிப்புக் கணக்குகளைப் பயன்படுத்த முடியாது. கொண்டுவருபவருக்கு, வைப்பாளருக்கு அல்லது மூன்றாம் தரப்பினருக்குச் செலுத்தக்கூடியதாக எழுதப்பட்ட பண வைப்புக்கள், காசோலைகள், பங்கிலாபக் கொடுப்பனவுப் பத்திரங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள மறுக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.

2.4 அங்கீகாரத்திற்காக/சேகரிப்பிற்காக வைப்புச் செய்யப்படும் வேறு வங்கிகளின் பெயரிலான ரூபாய் காசோலைகள், லங்கா கிளியர் பிறைவேட் லிமிட்டட்டின் ("Lanka Clear Private Limited – LCPL") விதிகளுக்கு உட்பட்டவையாக இருக்கும். இந்த விதிகள் காலத்திற்குக் காலம் மாற்றப்படலாம். பெறுபவரின் வங்கியினால் விதிக்கப்படும் ஏதேனும் தரகுப்பணம் அல்லது கட்டணம், வங்கியின் பூரண சுயவிருப்பத்திற்கேற்ப, சம்பந்தப்பட்ட கணக்கில் அல்லது வேறேதும் கணக்கில், மேலதிக அறவீட்டுடன் அல்லது மேலதிக அறவீடு இல்லாமல் பற்று வைக்கப்படும்.

2.5 வெளிநாட்டு நாணயக் கணக்குகளில் வெளிநாட்டு நாணயத் தாள்களை வைப்புச் செய்யும்போது, நாணயத் தாள்கள் மற்றும் தந்திப் பணமாற்றம் தொடர்பான பரிவர்த்தனை விகித வித்தியாசத்தின் காரணமாக, வைப்புச் செய்யப்படும் தாள்களின் சம பெறுமதி குறைக்கப்படும்.

2.6 வங்கியின் பெயரில் எழுதப்பட்ட வரைபுகள்/காசோலைகளின் பேரிலான பணம் கணக்கு ஒன்றில் வரவு வைக்கப்படும்போது, வங்கியானது அதனால் பிரசுரிக்கப்பட்ட கட்டணப் பட்டியலுக்கு அமைய, கையாளுகைக் கட்டணங்களைக் கழித்துக்கொள்ளும்.

2.7 வைப்புக்கள் (பணம் அல்லது கணக்கு வைப்பாளரின் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் மட்டும்) சரத்து 2.10 இல் தெரிவிக்கப்பட்டுள்ள அல்லது வங்கியினால் காலத்திற்குக் காலம் அறிவிக்கப்படும் உச்சவரம்பிற்கு அமைவாக, எத்தனை

தடவைகள் வேண்டுமானாலும் ATM மற்றும் ESPM ஊடாக மேற்கொள்ளப்படலாம். ATM மற்றும் ESPM ஊடாக வழங்கப்படும் தற்காலிகப் பற்றுச்சீட்டின் மூலம் சகல வைப்புக்களும் ஊர்ஜிதம் செய்யப்படும்.

2.8 ESPM மற்றும்/அல்லது ATM மூலம் வைப்புச் செய்யப்பட்ட ஏதேனும் காசோலைகளுக்கான பணம் (ஏதேனும் இருப்பின்) கணக்கு வைப்பாளரின் (வைப்பாளர்களின்) கணக்கில் வைப்புச் செய்யப்பட்டாலன்றி, (தற்காலிகப் பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்பட்டாலும்கூட) அத்தகைய காசோலைகள் தொடர்பில் வங்கியானது கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) பொறுப்பாளியாகாது. தற்காலிகப் பற்றுச்சீட்டு ESPM மற்றும்/அல்லது ATM மூலம் வழங்கப்பட்டிருந்தாலும், ESPM / ATM மூலம் வைப்பிலிடப்பட்டதாகக் கூறப்படும் காசோலைகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்காவிட்டால், எந்தவொரு சூழ்நிலயிலும் அல்லது எந்தவொரு காரணத்திற்காகவும், வங்கியானது எத்தகைய உரிமைக் கோரிக்கையையும் ஏற்காது.

2.9 வங்கியானது கணக்கு வைப்பாளரின் (வைப்பாளர்களின்) கணக்கில் தவறுதலாக வரவு வைத்துவிட்டால், எந்தவொரு கட்டத்திலும், எந்தவொரு நேரத்திலும் அப் பதிவினை நேர்மாற்றம் செய்யவும், சம்பந்தப்பட்ட தொகையை கணக்கு வைப்பாளரிடம் (வைப்பாளர்களிடம்) இருந்து மீளக்கோரவும் உரிமை கொண்டுள்ளது.

2.10 ESPM/ATM மூலமான வைப்புக்களின் உச்சவரம்பான (இந்த உச்சவரம்பு காலத்திற்குக் காலம் மாற்றப்படலாம்) ரூ.200,000/-க்கு குறைந்த பண வைப்புக்களுக்கும் ATM உச்சவரம்பிற்கு (அல்லது வங்கியினால் காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கப்படக்கூடிய வேறேதும் தொகைக்கு) குறைவாக வங்கியின் கிளைகளிலுள்ள தன்னியக்க டெலர் இயந்திரங்களிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பண மீளப்பெறுகைகளுக்கும், வங்கியின் பிரசுரிக்கப்பட்ட கட்டணத் திட்டத்திற்கு அமைய, கட்டணம் அறவிடப்படும். இற்றைப்படுத்திய கட்டணத் திட்ட அறிக்கையை வங்கிக் கிளைகளிலும் www.hsbc.lk என்ற வங்கியின் வலைத்தளம் ஊடாகவும் பெற முடியும். ஒரு மாதத்திற்குரிய கட்டணங்கள், அடுத்த மாதத்தின் முதலாவது வெள்ளிக்கிழமையை அடுத்துவரும் முதலாவது வேலை நாளில் அல்லது வங்கியினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் வேறு தினத்தில் (தினங்களில்) கணக்கில் பற்று வைக்கப்படும்.

## 3. காலமுறை விபரக்கூற்றுகள்

3.1 கணக்கில் இடம்பெறும் சகல கொடுக்கல் வாங்கல்களின் (கணக்கு வைப்பளர்கள் பற்று அட்டை மூலம் மேற்கொள்ளும் கொடுக்கல் வாங்கல்களும் இதில் உட்படும்) விபரங்களும் வங்கியினால் அனுப்பப்படும் விபரக்கூற்றில் காட்டப்படும். இந்த விபரக்கூற்றுகள் கணக்கு வைப்பாளர்(கள்) அறிவுறுத்திய கால இடைவெளிகளில், இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக, வங்கியின் பதிவேடுகளிலுள்ள அவரது (அவர்களது) முகவரிக்கு (முகவரிகளுக்கு) தபாலில் அனுப்பிவைக்கப்படும்.

3.2 கணக்குகள் செயலிழந்தால், கணக்கு வைப்பாளர்(கள்) எழுத்துமூல வேண்டுகோள் விடுத்து, அக் கணக்குகளை மீண்டும் செயற்படுத்தும் வரை விபரக்கூற்றுக்கள அனுப்பப்பட மாட்டா.

3.3

3.3.1 ஒவ்வொரு விபரக்கூற்றும் கிடைத்தவுடன் அல்லது குறைந்தபட்சம் விபரக்கூற்றுக் கிடைக்கப்பெற்ற இருபது (20) தினங்களுக்குள் (“மீளாய்வுக் காலம்”) கணக்கு வைப்பாளர்(கள்) அவ் விபரக்கூற்றிலுள்ள சகல பதிவுகளையும் பரீசீலனை செய்து, தன்னிடம் (தம்மிடம்) உள்ள பதிவுகளுடன் ஒப்புநோக்கிச் சரிபார்க்க வேண்டும். ஏதேனும் தவறுகள், விடுபடுகைகள், முறைகேடுகள் (ஏதேனும் மோசடியான அல்லது அனுமதியற்ற கொடுக்கல் வாங்கல்களும் உட்படும்) காணப்படின் அல்லது அந்த விபரக்கூற்று தொடர்பில் வேறேதும் ஆட்சேபணைகள் (ஒட்டு மொத்தமான “கணக்கு முறைகேடுகள்” எனப்படும்) இருப்பின், கணக்கு வைப்பாளர்(கள்) அவை குறித்து உடனடியாக வங்கியின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். கணக்கு வைப்பாளர் (கள்) குறிப்பிட்ட மீளாய்வுக் காலப்பகுதிக்குள் வங்கிக்கு அறிவிக்கத் தவறினால், விபரக்கூற்றில் காட்டப்பட்டுள்ள மீதியும் கணக்கு முறைகேடுகள் உள்ளிட்ட சகல பதிவுகளும் சரியானவையாகவும் பூரணமானவையாகவும் அங்கீகரிக்கப்பட்டவையாகவும் கணக்கு வைப்பாளர் (கள்) மற்றும் வங்கியைக் கட்டுப்படுத்துபவையாகவும் கருதப்படும். இச் சரத்திற்கு அமைவாக கணக்கு வைப்பாளர் (கள்) அறிவித்த கொடுக்கல் வாங்கல்கள் தவிர, மிகச் சமீபத்திய விபரக்கூற்றுத் திகதி வரை இடம்பெற்ற ஏதேனும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் சகல பொறுப்புக்களிலிருந்தும் வங்கி விடுவிக்கப்படும்.

3.3.2 வேறிடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எதிர்விளைவுகளுக்கு மேலதிகமாக, மேலே சரத்து 3.3.1இல் தெரிவிக்கப்பட்டுள்ள கடப்பாடுகளுக்கு அமைந்து நடக்க கணக்கு வைப்பாளர்(கள்) தவறினால், மற்றும் கணக்கு வைப்பாளரின் நடத்தை அல்லது தவறுகை காரணமாக ஏதேனும் இழப்பு ஏற்பட்டால் (வரிகள், அறவீடுகள், அபராதங்கள், கட்டணங்கள், தெண்டங்கள் உட்பட வங்கிக்கு ஏற்படும் அல்லது எங்கிக்கு எதிராகக் கொண்டுவரப்படும் சகல விதமான இழப்புக்களும் இதில் அடங்கும்) அத்தகைய இழப்பிற்கு வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது என்பதைக் கணக்கு வைப்பாளர்(கள்) ஒப்புக்கொள்கின்றார்(கள்). இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிட்டது போல, விபரக்கூற்றுக்களை உரிய காலத்திற்குள் பரிசீலனை செய்ய கணக்கு வைப்பாளர்(கள்) தவறினால், விபரக்கூற்றின் அல்லது கொடுக்கல் வாங்கல் பதிவேடுகளின் பரிசீலனை மூலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கக்கூடிய ஏதேனும் தவறு அல்லது விடுபடுகைக்கான காரணம், அத்தகைய விபரக்கூற்று உரிய காலத்திற்குள் பரிசீலனை செய்யப்படாமையே என்பதைக் கணக்கு வைப்பாளர்(கள்) ஏற்றுக்கொள்கிறார்(கள்). வங்கியின் பாரிய கவனயீனம் அல்லது வேண்டுமென்றே இழைக்கப்பட்ட தவறு காரணமாக, பிழையாக அல்லது தவறுதலாக இடம்பெற்ற மீளப்பெறுகை மூலம் பிரதான தொகையில் ஏற்பட்ட உண்மையான நேரடி இழப்பு தொடர்பாக மட்டுமே வங்கியானது கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) பொறுப்பாளியாகும் என்பதைக் கணக்கு வைப்பாளர்(கள்) ஏற்றுக்கொள்கிறார்(கள்).

3.4 HSBC விபரக்கூற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள ஒரு கொடுக்கல் வாங்கல் தொடர்பாக அல்லது வேறேதும் விடயத்தில் கணக்கு வைப்பாளர்(கள்) ஆட்சேபணை தெரிவித்தால், அந்த ஆட்சேபணை கிடைத்த இரண்டு மாதங்களுக்குள் கணக்கு வைப்பாளரின் முறைப்பாட்டைத் தீர்த்துவைக்க HSBC மனப்பூர்வமான மற்றும் நியாயமான முயற்சிகளை மேற்கொள்ளும். இந்த முயற்சிகளின் முடிவில், சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல் செல்லுபடியானதென்று வங்கி தீர்மானிக்குமாயின், அது பற்றி கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) அறிவிக்கப்படும்.

**தற்போதுள்ள கணக்குப் புத்தக சேமிப்புக் கணக்குகளுக்கு மட்டும்**

**4. பொது**

4.1 வங்கியினால் வழங்கப்படும் கணக்குப் புத்தகத்தை கணக்கு வைப்பாளர்(கள்) மிகவும் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

4.2 கணக்குப் புத்தகம் தொலைந்தால் அல்லது சேதமடைந்தால், கணக்கு வைப்பாளர்(கள்) அது பற்றி உடனடியாக வங்கிக்கு அறிவிக்க வேண்டும். கணக்கு வைப்பாளர்(கள்) வைத்திருக்கும் கணக்குப் புத்தகத்தின் தொலைவு அல்லது சேதத்திற்கு வங்கி பொறுப்பாளியாகாது. இந்த விடயத்தில், கணக்கு வைப்பாளர்(கள்) வங்கிக்கு இழப்பெதிர்காப்புக் கடிதமொன்றை வழங்கும்படி கேட்கப்படுவார்கள்.

4.3 கணக்கு வைப்பாளர்(கள்) கணக்குப் புத்தகத்தில் தாமாகவே எவ்வித பதிவையும் செய்யக்கூடாது. வங்கி கோரும்போது கணக்குப் புத்தகம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கணக்குப் புத்தகத்தை இன்னொருவருக்கு உரிமை மாற்றம் செய்யவோ அல்லது பிணையாக வைக்கவோ முடியாது. ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலின் பின்பும், கணக்குப் புத்தகம் பரிசோதிக்கப்பட்டு, சரியான பதிவுகள் செய்யப்பட்டுள்ளனவா என்பது உறுதி செய்யப்பட வேண்டும். ஏதேனும் தவறுகள் காணப்படின், உடனடியாக வங்கியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

4.4 கணக்குப் புத்தகம் எப்போதுமே சரியான கணக்கு மீதியைக் காட்ட வேண்டும் என்ற அவசியமில்லை. ஏனெனில், கணக்குப் புத்தகத்தில் பதிவுகள் செய்யப்படாமலே வைப்புக்கள், அறவீடுகள் அல்லது பற்று வைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம்.

4.5 கணக்குப் புத்தகத்திலுள்ள விபரங்கள் கிரமமான முறையில் இற்றைப்படுத்தப்பட வேண்டும். பதிவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள் 15க்கு அல்லது வங்கியினால் அவ்வப்போது அறிவிக்கப்படும் எண்ணிக்கைக்குக் கூடுதலாக இருக்குமாயின், வங்கியானது தனது சுயவிருப்பின் பேரில், அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் விபரங்களை கணக்கு வைப்பாளரின் (வைப்பாளர்களின்) கடைசியாகத் தெரிந்த முகவரிக்குத் தபால் மூலம் அனுப்பிவைக்கும்.

4.6 வட்டியானது நடைமுறையிலுள்ள வட்டி வீதத்திற்கேற்ப நாளாந்த மீதியின் அடிப்படையில் கணிக்கப்பட்டு, மாத முடிவிற்கு முன்னர், குறிப்பிடப்பட்ட கணக்கில் அல்லது கணக்கு வைப்பாளரினால் (வைப்பாளர்களினால்) குறித்துரைக்கப்பட்ட வேறேதும் கணக்கில் வரவு வைக்கப்படும்.

**5. கணக்குப் புத்தகச் சேமிப்பிலிருந்து மீளப்பெறுகை**

5.1 ஆளடையாளம் நிரூபிக்கப்படும் பட்சத்திலும், அதைவிட முக்கியமாக பாஸ் புத்தகம் சமா்ப்பிக்கப்படும் பட்சத்திலும் பண மீளப்பெறுகைகள் அனுமதிக்கப்படும். பொருத்தமானவிடத்தில், இலங்கை அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட முத்திரை வரி, பற்று வரி அல்லது ஏதேனும் சட்டபூா்வ அறவீடுகள், வரிகள், கட்டணங்கள் என்பவற்றை கணக்கு வைப்பாளா்(கள்) செலுத்த வேண்டும்.

**விபரக்கூற்றுச் சேமிப்புக் கணக்குகளுக்கு மட்டும்**

6. **கணக்கை ஆரம்பித்தல்**

6.1 குறைந்தபட்ச ஆரம்ப வைப்பு ரூ.50,000/- (ஐம்பதாயிரம் இலங்கை ரூபாய்) மட்டுமே ஆகும். எனினும், தேவையான குறைந்தபட்ச மீதியை காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்ய வங்கிக்கு உரிமையுண்டு. கணக்கு வைப்பாளருக்கு/வைப்பாளா்களுக்கு முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு குறைந்தபட்ச ஆரம்ப வைப்புத் தொகையை வங்கி மாற்றம் செய்யக்கூடும்.

சகல சேமிப்புக் கணக்குகள் தொடா்பாகவும் (வங்கியின் ஸ்மாா்ட் சேவிங்ஸ் கணக்குகள், ஈசேவா் மற்றும் ட்ரிப்பிள் சேவா் கணக்குகள் மற்றும் தற்போதய மற்றும்/அல்லது நிலையான வைப்புக்கள், பிரிமியா் மற்றும் அட்வான்ஸ் திட்டத்தின் கீழ் வரும் கணக்குகள் தவிர வங்கியினால் புதிதாக அறிமுகப்படுத்தப்படக்கூடிய ஏனைய கணக்குகளும் இதில் உள்ளடங்கும்) கணக்கிலிருக்க வேண்டிய நடப்பு மீதி முப்பத்தையாயிரம் இலங்கை ரூபாயாகும் (ரூ.35,000/-). ஆகும். வெளிநாட்டு நாணயக் கணக்குகளைப் பொறுத்தவரையில், இது ஐந்நூறு அமெரிக்க டொலா்களாக (USD 500/-) அல்லது குறித்துரைக்கப்பட்ட வேறொரு வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகையாக இருக்கும். இத் தொகையானது வங்கியின் தீா்மானத்திற்கேற்ப காலத்திற்குக் காலம் கணக்கு வைப்பாளா்களுக்கான முன்னறிவித்தலுடன் மாற்றப்படலாம். இம் மாற்றம், இலங்கையிலுள்ள HSBC கிளைகளில் வைக்கப்படும் விளம்பரங்கள் மற்றும்/அல்லது www.hsbc.lk என்ற வங்கியின் வலைத்தளம் மூலம் அறிவிக்கப்படும். கணக்கு வைப்பாளா்(கள்) உரிய குறைந்தபட்ச மீதியைக் கணக்கில் வைத்திருக்காவிட்டால், வங்கியானது தனது தற்றுணிபின் பேரில், குறிப்பிட்ட

மாதத்திற்குரிய கட்டணம் ஒன்றை (“குறைந்த மீதிக் கட்டணம்” அல்லது **BBF**) அறவிடும். குறைந்தபட்ச மீதி பேணப்படாத மாதத்திற்குரிய BBF கட்டணம் அடுத்த மாதத்தில் சம்பந்தப்பட்ட கணக்கில் பற்று வைக்கப்படும்.

**7. வட்டி**

7.1 ஏதேனும் சேமிப்பு/வைப்புக் கணக்கிற்கான ஏதேனும் வட்டி வீதம் இலங்கையிலுள்ள HSBC கிளைகளில் மற்றும்/அல்லது www.hsbc.lk என்ற வங்கியின் வலைத்தளத்தில் பார்வைக்கு வைக்கப்படும். இது கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) முறைப்படி வழங்கப்பட்ட அறிவித்தலாகக் கொள்ளப்படும்.

7.2 சேமிப்புக் கணக்குகளுக்கான வட்டியானது நடைமுறையிலுள்ள வட்டி வீதத்திற்கேற்ப நாளாந்த மீதியின் அடிப்படையில் கணிக்கப்பட்டு, மாத முடிவிற்கு முன்னர், குறிப்பிடப்பட்ட கணக்கில் அல்லது கணக்கு வைப்பாளரினால் (வைப்பாளர்களினால்) குறித்துரைக்கப்பட்ட வேறேதும் கணக்கில் வரவு வைக்கப்படும். ரூபாய் நாணயத்திலான நடைமுறைக் கணக்கிலுள்ள மீதிகளுக்கு எவ்வித வட்டியையும் வங்கி வழங்காது.

7.3 சகல கணக்கு வைப்பாளர்களும் உள்நாட்டு இறைவரித் திணைக்கத்தினால் தேவைப்படுத்தப்பட்டுள்ளபடி தமது வரி நிலைமை மற்றும் வதிவிட நிலைமை பற்றிய விபரங்களைக் கணக்கு ஆரம்பப் படிவத்தில் குறிப்பிடுவது அவசியமாகும். கணக்கு வைப்பாளர்(கள்) சமர்ப்பிக்கும் பிரகடனத்திற்கு அமைய, வட்டிக் கொடுப்பனவுகளின் மீது காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் பொருத்தமான இடைநிறுத்தி வைக்கப்பட்ட வரி, குறிப்பிட்ட காலத்திற்குரிய வட்டிக் கொடுப்பனவிலிருந்து வங்கியினால் கழித்துக்கொள்ளப்படும்.

**நடைமுறைக் கணக்குகளுக்கு மாத்திரம்**

**8. கணக்கை ஆரம்பித்தல்**

8.1 வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழில் வழங்குநரிடமிருந்து அல்லது வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க இன்னுமொரு நடைமுறை கணக்கு வைப்பாளரிடமிருந்து அறிமுகக் கடிதமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் அல்லது குறிப்பிட்ட வாடிக்கையாளர் கணக்கொன்றை வைத்திருக்கும் இன்னுமொரு வணிக வங்கியினால் வழங்கப்பட்ட

சிபாரிசுக் கடிதத்தை சமர்ப்பிப்பதன் மூலம் ஆளொருவர்/ஆட்கள் ரூபாய் நாணயத்திலான நடைமுறைக் கணக்கை ஆரம்பிக்கலாம்.

8.2 ஆகக் குறைந்தது ரூ.50,000/-ஐ வைப்புச் செய்து ஒரு தனிப்பட்ட நடைமுறைக் கணக்கை ஆரம்பிக்கலாம். வெளிநாட்டு நாணய நடைமுறைக் கணக்காயின் 500 அமெரிக்க டொலரை அல்லது குறித்துரைக்கப்பட்ட வேறேதும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகையை வைப்பிலிட்டு தனிப்பட்ட நடைமுறைக் கணக்கை ஆரம்பிக்கலாம். கணக்கு வைப்பாளருக்கு/வைப்பாளர்களுக்கு முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு, ரூபாய் நடைமுறைக் கணக்கொன்றிற்குத் தேவைப்படும் ஆரம்ப வைப்புத் தொகையை வங்கியானது மாற்ற முடியும். வங்கி அதன் தனித் தற்றுணிபின் பேரில் அதனைவிடக் குறைந்த ஆரம்ப வைப்புடன் நடைமுறைக் கணக்கை ஆரம்பிக்கவும் அனுமதிக்கக்கூடும். ஆயினும், காலத்துக்குக் காலம் குறைந்தபட்ச மீதியை மீளாய்வு செய்வதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது. நடைமுறைக் கணக்குகளுக்கான தற்போதய குறைந்தபட்ச மீதித் தொகை **முப்பத்தையாயிரம் இலங்கை ரூபாய் (ரூ.35,000/-)** ஆகும். வெளிநாட்டு நாணய நடைமுறைக் கணக்குகளுக்கு அது ஐந்நூறு அமெரிக்க டொலர்களாக (USD 500/-) அல்லது குறித்துரைக்கப்பட்ட வேறேதும வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகையாக இருக்கும். அத்துடன், இத் தொகை வங்கியின் தனித் தற்றுணிபில் காலத்துக்குக் காலம் மாற்றப்படலாம். அத்தகைய ஆகக் குறைந்த மீதியைக் கணக்கு வைத்திருப்பவர்(கள்) பேணாவிட்டால் வங்கியானது தனது தற்றுணிபின் பேரில், குறிப்பிட்ட மாதத்திற்குரிய கட்டணம் ஒன்றை ("குறைந்த மீதிக் கட்டணம்" அல்லது BBF) அறவிடும். குறைந்தபட்ச மீதி பேணப்படாத மாதத்திற்குரிய BBF கட்டணம் அடுத்த மாதத்தில் சம்பந்தப்பட்ட கணக்கில் பற்று வைக்கப்படும்.

## 9. காசோலைப் புத்தகங்கள்

9.1 ரூபாய் நடைமுறை கணக்கு வைத்திருப்பவரின் (வைத்திருப்பவர்களின்) வேண்டுகோள் மீது காந்த மை அடையாளத்துடன் பதிப்பித்த காசோலைப் புத்தகம்(கள்) விநியோகிக்கப்படும். அரசாங்க முத்திரைக் கட்டணம் ஏதும் நடைமுறையில் இருப்பின் அதனையும் காசோலைப் புத்தகத்தை அச்சிடுவதற்கான செலவையும் உள்ளடக்கிய கட்டணங்கள் இந்தப் புத்தகங்களின் விநியோகத்துக்காக அறிவிடப்படும். இக் கட்டணங்கள் வங்கியின் கட்டணப் பட்டியலில் காட்டப்பட்டுள்ளன.

9.2 காசோலைப் புத்தக விண்ணப்ப வேண்டுகோள்கள் கிடைத்தவுடன் வங்கியானது கணக்கு வைப்பாளரின் (வைப்பாளர்களின்) வங்கியில் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு அதனை தபால் மூலம் அனுப்பிவைக்கும். இது தொடர்பில் ஏற்படும் தாமதத்திற்கு அல்லது இழப்புக்கு வங்கி பொறுப்பாளியாகாது.

9.3 ஒரு புதிய காசோலைப் புத்தகம் கிடைத்தவுடன் அதன்மீது பதிப்பிடப்பட்ட தொடர் இலக்கங்கள், கணக்கு இலக்கம் மற்றும் கணக்கு வைத்திருப்பவரின் (வைத்திருப்பவர்களின்) பெயர்(கள்) என்பவற்றையும், காசோலைகளின் எண்ணிக்கையையும் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். எவையேனும் ஒழுங்கீனங்கள் இருப்பின் உடனடியாக வங்கிக்கு அறிவிக்க வேண்டும்.

9.4 எவையேனும் காசோலைகளை வரைவதற்கு முன்னர், காசோலைப் புத்தகத்தின் முன்னட்டையின் உட்பகுதியில் பதிப்பிடப்பட்ட காசோலை விநியோகிப்பதற்கான நிபந்தனைகளை கணக்கு வைத்திருப்பவர்(கள்) நன்கு வாசிக்க வேண்டும். காலத்திற்குக் காலம் வழங்கப்படுகின்ற நிபந்தனைகளுக்கு அல்லது திருத்தங்களுக்கு கணக்கு வைத்திருப்பவர்(கள்) கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

9.5 வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள பணிப்பாணை மற்றும் மாதிரிக் கையொப்பத்திற்கு (கையொப்பங்களுக்கு) ஏற்ப கணக்கு வைத்திருப்பவர்(கள்) காசோலைகளில் கையொப்பமிட வேண்டும். கையொப்பத்தில் அல்லது கையொப்பமிடுபவர்களில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால் உடனடியாக வங்கிக்கு எழுத்து மூலம் அறிவுறுத்தப்பட வேண்டும்.

9.6 காசோலையானது நிரந்தர மையினால் வங்கியால் வழங்கப்பட்ட காசோலைகளில் மாத்திரம் வரையப்பட வேண்டும். காசோலை வரைபவரின்(களின்) ஒவ்வொரு திருத்தமும் பூரண கையொப்பம்(கள்) மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். காசோலைகளை வரைவதற்கு மின்சார/இலத்திரனியல் தட்டச்சுக்கள் மற்றும் அழிபடக்கூடிய மை என்பவற்றைப் பாவிக்கக் கூடாது. உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட முடியாத திருத்தத்திலிருந்து எழுகின்ற இழப்புக்களுக்கு வங்கி பொறுப்பாகாது.

9.7 காசோலைகள் காணாமற்போனால்.̇.திருடப்பட்டால் அல்லது தவறுதலாக வைக்கப்பட்டால் கொடுப்பனவை நிறுத்துவதற்காக காசோலை இலக்கம், திகதி, தொகை மற்றும் காசோலை கொடுக்கப்பட்டவரின் பெயர் என்பவற்றை கணக்கு வைத்திருப்பவர்(கள்) உடனடியாக வங்கிக்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய அறிவுறுத்தல் கிடைக்கப் பெறுகின்ற சந்தர்ப்பத்தில், ஏற்கனவே பணம் வழங்கப்படாத காசோலை(கள்) விடயத்தில் மாத்திரமே அறிவுறுத்தல் கருத்திற்கொள்ளப்படும். தொலைபேசி மூலம் விடுக்கப்படுகின்ற கொடுப்பனவு நிறுத்தல் அறிவுறுத்தல்கள் 48 மணித்தியாளங்களுக்குள் எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். 48 மணித்தியாளங்களுக்குள் அத்தகைய அறிவுறுத்தல் கிடைக்கப் பெறாவிட்டால், கணக்கு வைத்திருப்பவருக்கு (வைத்திருப்பவர்களுக்கு) அறிவிக்காமலே அத்தகைய கொடுப்பனவு நிறுத்தல் அறிவுறுத்தலை வங்கி நிராகரிக்க முடியும். 48 மணித்தியாளங்களுக்குள் எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்படாத கொடுப்பனவு நிறுத்தல் அறிவுறுத்தல்களுக்கு வங்கி ஒருபோதும் பொறுப்பாகமாட்டாது. இந்த நோக்கத்துக்காக, இழப்பெதிர்காப்புப் படிவம் ஒன்றை கணக்கு வைப்பாளர்(கள்) உரிய முறையில் நிரப்ப வேண்டும்.

9.8 காசோலைப் புத்தகங்கள் பாவிக்கப்படாத நேரத்தில் பாதுகாப்பான ஓர் இடத்தில் வைக்கப்பட்டிருப்பதை கணக்கு வைத்திருப்பவர்(கள்) உறுதிசெய்யவேண்டும்.

9.9 ஆரம்பிக்கப்படவிருக்கும் கணக்கு, காசோலைப் புத்தகப் பாவனை மூலம் செயற்படுத்துவதற்கு அனுமதிக்கப்படாத வகையைச் சேர்ந்ததாக கணக்காக இருந்தால், வங்கி அக் கணக்கு வைப்பாளருக்குக் காசோலைப் புத்தகத்தை வழங்காது.

9.10 இலங்கை மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் பிரமாணங்களுக்கு இணங்கியொழுகுவதற்காக ஏதேனும் காசோலைகளை தடைசெய்ய மற்றும்/அல்லது திருப்பியனுப்ப வங்கிக்கு உரிமையுண்டு.

**10. மீளப்பெறுகைகள்**

10.1 வங்கியுடன் செய்துகொள்ளப்பட்ட விசேட முன்னேற்பாடுகள் இல்லாமல், கணக்கு வைத்திருப்பவர்(கள்) மேலதிகப் பற்றை பெற முடியாது. போதியளவு பணம் கணக்கில் இல்லாத சந்தர்ப்பத்தில் காசோலைகளை நிராகரிப்பதற்கு வங்கி உரிமை கொண்டுள்ளது. மேலும், மறுக்கப்பட்ட காசோலைக்காக ஒரு கட்டணத்தை அறவிடும் உரிமையும்

வங்கிக்கு உள்ளது. காசோலையின்(களின்) மேலதிகப் பற்றுக்கு வங்கி தனது தற்றுணிபின் பேரில் அனுமதிக்கலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் கேட்கின்றபோது நிபந்தனையின்றி வட்டி மற்றும் வங்கிக் கட்டணங்கள் என்பவற்றுடன் மேலதிகமாகப் பெற்ற தொகையை மீளச் செலுத்துத்தும் கடப்பாடு கணக்கு வைத்திருப்பவருக்கு (வைத்திருப்பவர்களுக்கு) உண்டு. கணக்கு வைத்திருப்பவரிடம் (வைத்திருப்பவர்களிடம்) இருந்து வட்டியையும் வங்கிக் கட்டணங்களையும் மீட்டுக்கொள்வதற்கான உரிமை வங்கிக்கு உள்ளது. ஏதேனும் மேலதிகப் பற்று வசதியொன்றை வழங்குவதற்கு வெளிப்படையாக அல்லது உட்கிடையாக வங்கியைப் பிணிக்கின்ற ஓர் ஒப்பந்தமாக இதனைக் கொள்ள முடியாது.

10.2 கொடுக்கல் வாங்கல் மீது காலத்துக்குக் காலம் சட்டத்தினால் விதிக்கப்படும் அறவீடுகள் உட்பட நடைமுறையிலிருக்கும் சகல அறவீடுகளும் வரிகளும் கணக்கு வைத்திருப்பவரிடம் (வைத்திருப்பவர்களிடம்) இருந்து அறவிடப்படும். சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதன் விளைவாக, கணக்கு வைத்திருப்பவர்கள்(கள்) முகங்கொடுக்கும் உரிமைக் கோரல்களுக்கு அல்லது வேறு விதத்தில் அவர்களுக்கு ஏற்படும் இழப்புக்களுக்கு வங்கி பொறுப்பாளியாக மாட்டாது.

11. **ஒழுங்குபடுத்தல் கணக்குகள் மாத்திரம்**

இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகள் மற்றும் பிரமாணங்களுக்கு உட்படுத்தப்படும் மற்றும் அவற்றால் ஆட்சி செய்யப்படும் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கு (PFCA), மூலதனக் கொடுக்கல் வாங்கல் ரூபாய் கணக்கு (CTRA), வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கு (BFCA), உள்வரும் முதலீட்டுக் கணக்கு (IIA), இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்கு (DFCA), இராஜதந்திர ரூபாய் கணக்கு (DRA), விசேட வைப்புக் கணக்கு (SDA), வெளிச்செல்லும் முதலீட்டுக் கணக்கு (OIA), வதியாதோர் ரூபாய் கணக்கு (NRRA), குடிபெயர்ந்தோரின் அனுப்பீடு செய்யக்கூடிய வருமானக் கணக்கு (ERIA) ஆகியன உள்ளிட்ட (ஆனால், அவை மட்டுமல்ல) ஒழுங்குமுறைக் கணக்குகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் சகல ஒன்லைன் வங்கிச் சேவைக் கொடுக்கல் வாங்கல்களும் HSBCயின் தனிப்பட்ட இணையத்தள வங்கிச் சேவை (PIB) தளத்தில் மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

மேற்படி ஒழுங்குமுறைக் கணக்குகளிலிருந்து மேற்கொள்ளப்படும் உள்வரும் அல்லது வெளிச்செல்லும் PIB கொடுக்கல் வாங்கல்கள் நிராகரிக்கப்படுவதன் விளைவாக ஏற்படும் ஏதேனும் இழப்புகளுக்கு வங்கி எவ்விதத்திலும் பொறுப்பேற்காது.

**கால வைப்புக்களுக்கு மாத்திரம்**

**12. கணக்கை ஆரம்பித்தல்**

12.1 ரூபாய் நாணயக் கால வைப்புக் கணக்கை ஆரம்பிப்பதற்காக குறைந்தபட்ச வைப்புத் தொகை ஒரு இலட்சம் இலங்கை ரூபாய் (ரூ.100,000/-) ஆகும். வெளிநாட்டு நாணயக் கால வைப்புக் கணக்கை ஆரம்பிப்பதற்கான குறைந்தபட்ச வைப்புத் தொகை உரிய வெளிநாட்டு நாணயத்தில் ஒரு இலட்சம் இலங்கை ரூபாய்க்கு (ரூ.100,000/-) சமமான தொகை என்பதுடன். இந்த வைப்பு ஆகக் குறைந்தது ஒரு மாத காலத்துக்கு வலுவில் இருக்க வேண்டும். வங்கியானது கணக்கு வைப்பாளருக்கு/வைப்பாளர்களுக்கு முன்னறிவித்தல் கொடுத்துவிட்டு, ரூபாய் நாணயக் கால வைப்புக் கணக்கிற்கான ஆரம்ப வைப்புத் தொகையை மாற்ற முடியும். எனினும், கணக்கில் இருக்க வேண்டிய குறைந்தபட்ச நிலுவையைக் காலத்திற்குக் காலம் மாற்றுவதற்கான செய்வதற்கான உரிமை வங்கிக்கு உள்ளது. வங்கியின் கிளைகளில் பார்வைக்கு வைக்கப்படும் விளம்பரங்கள் மற்றும்/அல்லது www.hsbc.lk என்ற வங்கியின் வலைத்தளம் மூலம் இது பற்றிக் கணக்கு வைப்பாளர்களுக்கு அறிவிக்கப்படும்.

**13. மீளப்பெறுகைகள்**

13.1 கால வைப்புக்களை அதன் முதிர்ச்சியின் பின்னர் மாத்திரமே மீளப்பெறலாம். ஏதேனும் கால வைப்பின் முதிர்ச்சிப் பெறுவனவுத் தொகைகளானது, அத் தொகையினை மீள் முதலீடு செய்வதற்கான அறிவுறுத்தல் எதுவும் வழங்கப்பட்டிருக்காவிடின், குறிப்பிடப்பட்ட முதிர்ச்சித் தினத்திலிருந்து உடனடியாக அடுத்துறுகின்ற வேலை நாளில் மாத்திரமே மீளளிக்கப்படும்.

13.2 எனினும், கணக்கு வைத்திருப்பவரினால (வைத்திருப்பவர்களினால்) உரிய முறையில் அங்கீகரிக்கப்பட்ட எழுத்துமூல வேண்டுதல்களுக்கு அமைய, (வங்கிக்கு வழங்கப்பட்டிருக்கின்ற பணிப்பாணைக்கு ஏற்ப) வங்கியானது தனது தற்றுணியின் பேரில் கால வைப்புக்களை அவற்றின் முதிர்ச்சிக்கு முன்பே விடுவிக்கலாம். அவ்வாறு வங்கியின்

தனித் தற்றுணியின் பேரில் முதிர்ச்சிக்கு முன்னர் விடுவிக்கப்பட்ட கால வைப்புக்கள் வங்கியின் கட்டணப் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கு அமைவான தண்டப் பண விதிப்புக்களுக்கு உட்படும்.

13.3 தற்போதுள்ள வைப்புப் தொகையுடன் சேர்த்து மீள முதலீடு செய்யும் நோக்கத்திற்காக அல்லது வேறேதும் காரணத்திற்காக, கால வைப்பினை முதிர்ச்சிக்கு முன்பே திரும்பப் பெற்றால், வங்கியின் கட்டணப் பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கு அமைவான தண்டக் கட்டணங்கள் அறவிடப்படும்.

13.4 மாறான அறிவுறுத்தல் எதுவும் இல்லாத பட்சத்தில், முதிர்ச்சியடையும் வைப்புத் தொகையானது முதிர்ச்சித் தினத்தில் நிலவுகின்ற வட்டி வீதத்தில் அதேயளவான காலத்துக்குப் புதுப்பிக்கப்படும்.

13.5 கால வைப்புக்ளின் மீளப்பெறுகை மற்றும் வட்டி மீது ஒழுங்குபடுத்துனர்கள் கட்டுப்பாடுகளை விதிக்கும் பட்சத்தில் கணக்கு வைத்திருப்பவர்(கள்) அத்தகைய கட்டுப்பாடுகளுக்குப் பணிந்தொழுக வேண்டும்.

**14. <u>வட்டி</u>**

14.1 கால வைப்புக்களுக்கான வட்டி வீதம் முன்னறிவித்தலுடன் மாற்றப்படலாம். எனினும், ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்ட கால வைப்புக்களைப் பொறுத்தவரையில், அவை முதிர்ச்சி அடையும் வரை அவற்றிற்கான வட்டி வீதத்தை வங்கி மாற்றாது. ஏதேனும் கால வைப்பு/சேமிப்பு/வைப்பு கணக்கிற்கு வழங்கப்படும் ஏதேனும் வட்டி வீதம் இலங்கையிலுள்ள HSBC கிளைகளில் மற்றும்/அல்லது www.hsbc.lk என்ற வங்கியின் வலைத்தளத்தில் பார்வைக்கு வைக்கப்படும். இது கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) முறைப்படி வழங்கப்பட்ட அறிவித்தலாகக் கொள்ளப்படும்.

**15. பொது வசதிக் கட்டணக் கொடுப்பனவுகள்**

15.1 ஏதேனுமொரு பொது வசதிக் கம்பனிக்கு ATM அல்லது PIB மூலம் செலுத்தப்பட்ட கொடுப்பனவை வங்கியானது உரிய வேளையில் செலுத்தியிருக்குமாயின், அப் பொது வசதிக் கம்பனி தொடர்பாகக் கணக்கு வைப்பாளர் பேணும் கணக்கில் அத் தொகையை

வரவு வைப்பதில் பொது வசதிக் கம்பனியின் தரப்பிலான ஏதேனும் தாமதத்திற்கு வங்கி பொறுப்பாளியாக மாட்டாது.

**16. அழைப்பு நிலைய சேவைகள் மற்றும் அழைப்பு நிலைய சேவை இழப்பெதிர்காப்பு**

16.1 வங்கியினால் வழங்கப்படும் அழைப்பு நிலையச் சேவைகள் பின்வருவன தொடர்பான (வங்கியின் தனித் தற்றுணிபிற்கேற்ப) தொலைபேசிமூல அறிவுறுத்தல்களை உள்ளடக்கும்:

16.1.1 கணக்கு வைப்பாளரின் கணக்குகளுக்கு இடையிலான பண மாற்றங்கள்:
கூட்டுக் கணக்குகளைப் பொறுத்தமட்டில், இருவரில் ஒருவர் கைச்சாத்திட்டால் போதுமானது என்ற அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தால் மாத்திரமே பண மாற்றங்கள் அனுமதிக்கப்படும். அத்தகைய சந்தர்ப்பங்களில், பண மாற்றமானது அதே கணக்கு வைப்பாளரின் (வைப்பாளர்களின்) தனி அல்லது கூட்டுக் கணக்குகளுக்கு இடையே மேற்கொள்ளப்பட வேண்டும்.

16.1.2 கணக்கு மீதி, கடைசிக் கொடுக்கல் வாங்கல்கள் (கணக்கு வைப்பாளரின் கணக்குகள் தொடர்பானவை) மற்றும் நாணயப் பரிவர்த்தனை வீதங்கள், வைப்பு வட்டி வீதங்கள் என்பன பற்றிய விசாரணைகள்.

16.1.3 கணக்கு வைப்பாளரின் கணக்குகள் தொடர்பான விபரக்கூற்றுக்கள் (தெரிவு செய்யப்பட்ட கணக்குகளுக்கு மட்டும்), காசோலைப் புத்தகங்கள் (இரண்டாவது காசோலைப் புத்தகம் தொடக்கம்) காசோலைகளின் தடை என்பவற்றிற்கான வேண்டுகோள்கள்.

16.1.4 வங்கியினால் காலத்திற்குக் காலம் அறிமுகப்படுத்தப்படக்கூடிய வேறேதும் வங்கிச் சேவைகள் அல்லது முதலீட்டுச் சேவைகள்.

16.2 ஏதேனும் உபகரணக் கோளாறு அல்லது செயலிழப்பு உட்பட, முழுமையாக அல்லது பகுதியாக வங்கியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணத்தினால் தொலைபேசி மூலமான அறிவுறுத்தலைச் செயற்படுத்த முடியாதுபோனால், கணக்கு வைப்பாளர் (வைப்பாளர்கள்) அதற்காக வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது. அறிவுறுத்தலைச் செயற்படுத்துவதால் அல்லது செயற்படுத்தாமல் விடுவதால் அல்லது அது தொடர்பாக

கணக்கு வைப்பாளருக்கு நேரடியாக, நேரடியற்ற முறையில் அல்லது விளைவாக ஏற்படக்கூடிய ஏதேனும் இழப்பிற்கு வங்கியானது எந்த வகையிலும் பொறுப்பாளியாக மாட்டாது. வங்கியானது தொலைபேசி மூலமான அறிவுறுத்தல்களை ஏற்பதால், அவற்றைச் செயற்படுத்துவதால் அல்லது செயற்படுத்தத் தவறுவதால் நேரடியாக, நேரடியற்ற முறையில் அல்லது விளைவாக ஏற்படக்கூடிய ஏதேனும் சட்ட நடவடிக்கை, வழக்கு, உரிமைக் கோரல்கள், இழப்புக்கள், சேதங்கள், செலவுகள் என்பவற்றிற்கு எதிராக வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்கப்பட வேண்டும். தொலைபேசி வங்கிச் சேவை முடிவுறுத்தல் செய்யப்பட்டாலும் இந்த இழப்பெதிர்காப்பு நடைமுறையிலிருக்கும்.

16.3 இங்குள்ள விதிகளின் பேரில் தொலைபேசி அறிவுறுத்தல்களை வழங்க கணக்கு வைப்பாளருக்கு உள்ள உரிமையானது, எப்போதும் வங்கியின் சுயவிருப்பத்திற்கு அமைவானதாகவே இருக்கும். வங்கி எந்த நேரத்திலும் முன்னறிவித்தல் கொடுக்காமலே இந்த உரிமையை இரத்துச்செய்ய முடியும்.

16.4 தொலைபேசிமூல அல்லது வேறு அறிவுறுத்தலைச் செயற்படுத்துவதற்குப் போதியளவு பணம் (அல்லது முன்னேற்பாடு செய்யப்பட்ட கடன் வசதி) கணக்கு வைப்பாளரின் கணக்கில் இருப்பதை கணக்கு வைப்பாளர் (வைப்பாளர்கள்) உறுதிப்படுத்த வேண்டும். அறிவுறுத்தலைச் செயற்படுத்த வங்கி தவறுவதால் ஏற்படும் விளைவுகளுக்கு வங்கி பொறுப்பாளியாகாது. கணக்கில் போதியளவு பணம் இல்லாவிடினும், வங்கி தனது சுயவிருப்பின் பேரில் அறிவுறுத்தலைச் செயற்படுத்தத் தீர்மானித்தால், கணக்கு வைப்பாளரின் அங்கீகாரத்தைப் பெறாமலும் அவருக்கு முன்னறிவித்தல் கொடுக்காமலும் அவ்வாறு செய்யலாம். இதன் விளைவாக ஏற்படக்கூடிய மேலதிகப் பற்று, முற்பணம் அல்லது கடன் வசதிக்கும் அது தொடர்பான அறவீடுகளுக்கும் கணக்கு வைப்பாளர் (வைப்பாளர்கள்) பொறுப்பேற்க வேண்டும். அத்தகைய மேலதிகப் பற்று, முற்பணம் அல்லது கடனுக்கு நடைமுறையிலுள்ள வீதங்களில் வட்டி அறவிடப்படும். இது இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளினாலும் சம்பந்தப்பட்ட கணக்குகளின் வழமையான விதிகளினாலும் ஆளுகை செய்யப்படும்.

16.5 அழைப்பு நிலையத்தின் மூலம் வழங்கப்படும் சேவைகளுக்கென, காலத்திற்குக் காலம், வங்கியின் கட்டணத் திட்டத்திற்கு அமைவான சேவைக் கட்டணங்கள் மற்றும் ஏனைய அறவீடுகளை விதிப்பதற்கு வங்கி உரிமை கொண்டுள்ளது.

16.6 கணக்கு வைப்பாளர்கள் வங்கியின் அழைப்பு நிலையம் மூலமாக வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்களைச் செய்யும்போது, அவர்கள் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டுப் பிரமாணங்களினால் ஆளுகை செய்யப்படுவார்கள்.

16.7 இச் சரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள சேவைகள், கட்டணங்கள் மற்றும் ஏனைய அறவீடுகள், இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பவற்றில் காலத்திற்குக் காலம் ஏதேதையேனும் சேர்க்க, நீக்க அல்லது மாற்ற வங்கி உரிமை கொண்டுள்ளது. இத்தகைய மாற்றங்கள், விபரக்கூற்றுடன் வழங்கப்படும் விபரக்குறிப்பு மற்றும்/அல்லது www.hsbc.lk என்ற வங்கியின் உத்தியோகபூர்வ வலைத்தளம் மற்றும்/அல்லது வங்கியின் கிளைகளில் பார்வைக்கு வைக்கப்படும் விளம்பரங்கள் மூலம் கணக்கு வைப்பாளர்களுக்கு அறிவிக்கப்படும்.

**16.8 இழப்பெதிர்காப்பு**

16.8.1 அழைப்பவரின் நம்பகத்தன்மையை ஊர்ஜிதம் செய்வதற்கு வங்கி தன்னாலியன்ற நியாயமான நடவடிக்கைகளை எடுக்கும். எனினும், வங்கியானது நல்ல விசுவாசத்துடனும் பாரிய கவனக்குறைவு இல்லாமலும் செயற்படுமாயின், தொலைபேசி மூலம் வழங்கப்பட்ட வேண்டுகோள்களின் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக கணக்கு வைப்பாளருக்கோ (வைப்பாளர்களுக்கு) அல்லது வேறு தரப்பினருக்கோ எந்த விதத்திலும் பொறுப்பாளியாக மாட்டாது.

16.8.2 தொலைபேசி மூலமான அறிவுறுத்தலை ஏற்றுக்கொள்ளுதல், அது தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் அல்லது நடவடிக்கை எடுக்காமல்விடுதல் தொடர்பில் வங்கி மேற்கொள்ளும் செயலின் அல்லது விடயத்தின் நேரடி அல்லது நேரடியற்ற விளைவாக எதேனுமொரு தரப்பினால் வங்கிக்கு எதிராகக் கொண்டுவரப்படக்கூடிய சட்ட நடவடிக்கைள், வழக்குகள், உரிமைக் கோரல்கள் அல்லது வங்கிக்கு ஏற்படும் இழப்புக்கள், செலவுகள் என்பவற்றிற்கு எதிராக வங்கிக்கு இழப்பெதிர்காப்பை வழங்கவும் அதனைத் தொடர்ந்து பேணவும் வங்கியைத் தீங்கிலிருந்து பாதுகாக்கவும் கணக்கு வைப்பாளர்(கள்) இணங்கிப் பொறுப்பேற்கின்றனர்.

16.8.3 வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் பண மாற்றம் அல்லது கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) மற்றும்/அல்லது அழைப்பு எடுத்தவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் தகவல் தொடர்பில் கணக்கு வைப்பாளர்(கள்) வங்கிக்கு எதிராக எவ்வித உரிமைக் கோரலையும் சமர்ப்பிக்க முடியாது என்பதையும் வங்கியானது நல்ல விசுவாசத்துடனும் பாரிய கவனக்குறைவு இல்லாமலும் செயற்பட்டிருக்குமாயின், இது சம்பந்தமாக நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் ஏற்பட்ட இழப்பு அல்லது சேதத்திற்கு வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது என்பதையும் கணக்கு வைப்பாளர்(கள்) ஏற்றுக்கொள்கின்றார்(கள்).

16.8.4 அழைப்பு நிலையச் சேவை முடிவுறுத்தப்பட்டாலும் இந்த இழப்பெதிர்காப்பு நடைமுறையிலிருக்கும்.

## 17. தொலைபேசி வங்கிச் சேவை

17.1 வங்கியினால் வழங்கப்படும் தொலைபேசி வங்கிச் சேவை பின்வரும் சேவைகளை உள்ளடக்கும்:

17.1.1 கணக்கு வைப்பாளரின் கணக்குகளுக்கு இடையே பண மாற்றங்களைச் செய்தல்.

17.1.2 கணக்கு வைப்பாளரின் (வைப்பாளர்களின்) ஏதேனும் கணக்கிலிருந்து, தொலைபேசி வங்கிச் சேவை மூலம் பணம் பெறுவதற்காக கணக்கு வைப்பாளரினால் (வைப்பாளர்களினால்) ஏற்கனவே குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கணக்கிற்கு ("குறித்துரைக்கப்பட்ட பெறுநர் கணக்கு") முன்பே நிர்ணயிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட வரையறைக்குள், பண மாற்றங்களைச் செய்தல்.

17.1.3 கணக்கு மீதி, கடைசிக் கொடுக்கல் வாங்கல்கள் (கணக்கு வைப்பாளரின் கணக்குகள் தொடர்பானவை), நாணயப் பரிவர்த்தனை வீதங்கள் மற்றும் வைப்பிற்கான வட்டி வீதங்கள் பற்றி விசாரித்தல்.

17.1.4 கணக்கு வைப்பாளரின் கணக்கு தொடர்பான விபரக்கூற்றுக்கள் (தெரிவு செய்யப்பட்ட கணக்குகளுக்கு), காசோலைப் புத்தகங்கள், காசோலைத் தடை என்பவற்றிற்கான வேண்டுகோள்கள்.

17.1.5 வங்கியினால் காலத்திற்குக் காலம் அறிமுகப்படுத்தப்படும் வேறேதும் வங்கிச் சேவைகள் அல்லது முதலீட்டுச் சேவைகள்.

17.2 கணக்கு வைப்பாளரினால் (வைப்பாளர்களினால்) தொலைபேசி மூலம் விடுக்கப்படும் வேண்டுகோள்களின் அடிப்படையில் செயற்பட வங்கிக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளபோதிலும், வங்கி அதற்குக் கட்டுப்பட்டு நடக்கத் தேவையில்லை. தொலைபேசி மூலமான அறிவுறுத்தல் அதிகாரமற்ற ஒருவரினால் வழங்கப்பட்டதென வங்கி தனது தற்றுணிபின் பேரில் கருதுமாயின் அந்த அறிவுறுத்ததலை செயற்படுத்தாமல் விட முடியும் என்பதையும் தொலைபேசிமூல அறிவுறுத்தல் வழங்கியவரின் அடையாளத்தை ஊர்ஜிதம் செய்யும் கடப்பாடு வங்கிக்கு கிடையாது என்பதைகயும் கணக்கு வைப்பாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.

17.3 வங்கியினால் வழங்கப்பட்ட தொலைபேசி வங்கிச் சேவைக்கான தனிப்பட்ட அடையாள இலக்கத்தை (PIN) எப்போதும் மிக இரகசியமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்க கணக்கு வைபாளர்(கள்) இணங்குகின்றனர். PIN இலக்கம் தொலைந்துவிட்டால் அல்லது அது அதிகாரமற்ற ஒரு தரப்பிற்குத் தெரிந்துவிட்டதெனச் சந்தேகித்தால், உடனடியாக வங்கிக்கு அறிவிக்க வேண்டும்.

17.4 ஏதேனும் உபகரணக் கோளாறு அல்லது செயலிழப்பு உள்ளிட்ட வங்கியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களினால் தொலைபேசி மூலம் விடுக்கப்பட்ட ஏதேனும் அறிவுறுத்தல்களைச் செயற்படுத்துவதற்கு வங்கி தவறுமாயின், வங்கி அதற்காக கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) பொறுப்பாளியாக மாட்டாது. வங்கியானது தொலைபேசிமூல அறிவுறுத்தல்களை ஏற்றுக்கொண்டு, அதன்படி செயற்படுவதால் அல்லது செயற்படத் தவறுவதால் நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் அல்லது விளைவாக ஏற்படக்கூடிய ஏதேனும் இழப்புக்களுக்கு எந்தச் சூழ்நிலையிலும் வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது. இது தொடர்பிலான சட்ட நடவடிக்கைகள், உரிமைக் கோரல்கள், இழப்புக்கள், சேதங்கள், செலவுகள் முதலியவற்றிலிருந்து வங்கியைப் பாதுகாப்பதற்கு இழப்பெதிர்காப்பு வழங்கப்பட வேண்டும். தொலைபேசி வங்கிச் சேவை முடிவுறுத்தப்பட்டாலும் இந்த இழப்பெதிர்காப்பு நடைமுறையிலிருக்கும்.

17.5 இங்குள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம் தொலைபேசிமூல அறிவுறுத்தல்களை விடுக்க கணக்கு வைப்பாளருக்கு உள்ள உரிமையானது எப்போதுமே வங்கியின் சுய விருப்பத்தைப் பொறுத்ததாகும். வங்கியானது இந்த உரிமையை எந்த நேரத்திலும் முன்னறிவித்தலின்றி இரத்துச்செய்யலாம்.

17.6 தொலைபேசி மூலம் அல்லது வேறு வழியில் வழங்கப்படும் அறிவுறுத்தல்களைச் செயற்படுத்துவதற்கு போதியளவு பணம் கணக்கு வைப்பாளரின் கணக்கில் மற்றும்/அல்லது கிறெடிட் காா்ட் கணக்கில் இருப்பதை (அல்லது கடன் வசதிகள் முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதை) கணக்கு வைப்பாளா் (வைப்பாளா்கள்) உறுதிப்படுத்த வேண்டும். அத்தகைய பற்றாக்குறை காரணமாக அறிவுறுத்தலைச் செயற்படுத்த வங்கி தவறுவதால் ஏற்படும் விளைவுகளுக்கு வங்கி பொறுப்பாளியாகாது. கணக்கில் பற்றாக்குறை நிலவியபோதிலும், வங்கியானது கணக்கு வைப்பாளரின் (வைப்பாளா்களின்) முன் அனுமதியைப் பொறாமலும், அவருக்கு (அவா்களுக்கு அறிவிக்காமலும்), தனது பூரண தற்றுணிபின் பேரில் அறிவுறுத்தல்களைச் செயற்படுத்தத் தீா்மானிக்கலாம். அத்தகைய சந்தா்ப்பத்தில் ஏற்படக்கூடிய மேலதிகப் பற்று, முற்பணம் அல்லது கடனுக்கும் தொடா்புடைய சகல அறவீடுகளுக்கும் கணக்கு வைப்பாளா் (வைப்பாளா்கள்) பொறுப்பேற்க வேண்டும். மேலதிகப் பற்று, முற்பணம் அல்லது கடனுக்கு, வங்கியானது நடைமுறையிலுள்ள வீதத்தில் வட்டியை அறவிடும். அத்தகைய அறவீடு, இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளினாலும் சம்பந்தப்பட்ட கணக்குகள் தொடா்பான வங்கியின் வழமையான விதிகள் மற்றும் நிபந்தனைகளினாலும் ஆளுகை செய்யப்படும்.

17.7 கணக்கு வைப்பாளரின் (வைப்பாளா்களின்) தொலைபேசி அறிவுறுத்தல்களுக்கேற்ப வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட பொருத்தமான கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விபரங்களை, முன்கூட்டியே குறித்துரைக்கப்பட்ட பண மாற்றத்திற்குரிய கணக்கை (கணக்குளை) வைத்திருப்பவருக்கு (வைத்திருப்பவா்களுக்கு) மற்றும்/அல்லது ஏதேனும் கூட்டுக் கணக்கை வைத்திருப்பவருக்கு அறிவிப்பது கணக்கு வைப்பாளரின் (வைப்பாளா்களின்) பொறுப்பாகும். இத்தகைய அறிவித்தலைச் செய்வது வங்கியின் பொறுப்பல்ல.

17.8 வங்கியானது தொலைபேசி வங்கிச் சேவைகளுக்கென வங்கியின் கட்டணத் திட்டத்திற்கு அமைவாக சேவைக் கட்டணங்கள் மற்றும் வேறு அறவீடுகளை விதிப்பதற்கு உரிமை கொண்டுள்ளது.

17.9 வங்கியானது காலத்திற்குக் காலம் இச் சேவையின் செயற்பாட்டு எல்லைகளிலும் இங்குள்ள விதிகளிலும் எதையேனும் சேர்ப்பதற்கு, நீக்குவதற்கு அல்லது மாற்றுவதற்கு உரிமை கொண்டுள்ளது. வங்கியானது அத்தகைய மாற்றங்கள், விபரக்கூற்றுடன் வழங்கப்படும் விபரக்குறிப்பு மற்றும்/அல்லது www.hsbc.lk என்ற வங்கியின் உத்தியோகபூர்வ வலைத்தளம் மற்றும்/அல்லது வங்கியின் கிளைகளில் பார்வைக்கு வைக்கப்படும் விளம்பரங்கள் மூலம் அறிவிக்கப்படும் என்பதுடன், இது கணக்கு வைப்பாளர்களுக்கு முறைப்படி வழங்கப்பட்ட அறிவிப்பாகவும் கொள்ளப்படும். இந்த அறிவித்தல் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 5 நாட்களுக்குப் பின், சம்பந்தப்பட்ட மாற்றம் அமுலுக்கு வரும். இக் காலப்பகுதி முடிவதற்குள் கணக்கு வைப்பாளர் (வைப்பாளர்கள்) சேவையை முடிவுறுத்தி இருக்காவிட்டால், அவர் (அவர்கள்) இந்த மாற்றத்திற்கு உடன்பட்டுள்ளார்(கள்) என்று கொள்ளப்படும்.

17.10 தொலைபேசி வங்கிச் சேவையைப் பெறுவதற்காக வங்கியினால் வழங்கப்பட்ட தனிப்பட்ட அடையாள இலக்கம் (PIN) மற்றும் தனிப்பட்ட வங்கிச் சேவை இலக்கம் (PBN) என்பன பயன்படுத்தப்பட்டால் அல்லது இச் சேவையைப் பெறுவதற்காக கணக்கு வைப்பாளரின் (வைப்பாளர்களின்) கிறெடிட் கார்ட் இலக்கங்கள் பயன்படுத்தப்பட்டால், கணக்கு வைப்பாளர்(கள்) இந்த விதிகளை ஏற்றுக்கொண்டார்(கள்) என்று கருதப்படும்.

17.11 வங்கியின் தொலைபேசி வங்கிச் சேவை மூலம் வெவ்வேறு நாணயக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும்போது, இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டுப் பிரமாணங்களினால் கணக்கு வைத்திருப்பவர்/ கள் ஆளுகை செய்யப்படுவார்/கள்.

**18. வரிகள்**

18.1 சகல கணக்கு வைப்பாளர்களும் கணக்கு ஆரம்பப் படிவத்தில் தமது வரி நிலைமை மற்றும் வதிவிட நிலைமை பற்றிய பிரகடனத்தைப் பூர்த்திசெய்ய வேண்டும். கணக்கு வைப்பாளர்களின் சம்பந்தப்பட்ட பிரகடனங்களும் வரி அந்தஸ்து விபரங்களும் உரிய

வேளையில் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் முழுப் பொறுப்பும் கணக்கு வைப்பாளரை (வைப்பாளர்களை) சாரும். சம்பந்தப்பட்ட பிரகடனங்களையும் வரி அந்தஸ்து விபரங்களையும் உரிய வேளையில் வழங்கத் தவறுதல் உள்ளிட்ட ஏதேனும் வழிகளில் கணக்கு வைப்பாளர் (வைப்பாளர்கள்) ஏதேனும் வரிப் பிரச்சினைகளை எதிர்நோக்க நேர்ந்தால், வங்கி எவ்விதத்திலும் அதற்குப் பொறுப்பாளியாகாது. கணக்கு வைப்பாளரினால் (வைப்பாளர்களினால்) சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரகடனம் சகல தற்போதய மற்றும் புதிய கணக்குகளுக்கும் பொருந்தும் என்பதுடன், அதே ஆணையளிப்பினால் ஆளுகை செய்யப்படும். உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அல்லது பொருத்தமான வேறொரு அதிகார சபையினால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்படும் வீதம் அல்லது வீதங்களுக்கு அமைய, வட்டிக் கொடுப்பனவுகளின் மீது விதிக்கப்படும் இடைநிறுத்திவைக்கப்பட்ட வரி அல்லது வேறேதும் வரி குறிப்பிட்ட காலப்பகுதிக்கான வட்டிக் கொடுப்பனவிலிருந்து வங்கியினால் கழிக்கப்படும். செலுத்தப்படாத இடைநிறுத்திவைக்கப்பட்ட வரிகளை உள்நாட்டு இணைவரித் திணைக்களம் அல்லது பொருத்தமான வேறொரு அதிகார சபை பிறிதொரு வேளையில் வங்கியிடமிருந்து கோருமானால், கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) அறிவித்தல் கொடுக்காமலே, கணக்கு வைப்பாளரிடம் (வைப்பாளர்களிடம்) இருந்து அவற்றை மீட்க வங்கிக்கு உரிமையுண்டு.

**19. கட்டணங்களின் பட்டியல்**

கணக்குகள் மற்றும் சேவைகள் தொடர்பாக சேவைக் கட்டணங்கள் மற்றும் அறவீடுகளை விதிக்க வங்கி உரிமை கொண்டுள்ளது. அத்தகைய கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் வங்கியின் விதிப்பனவுகள் பட்டியலில் விபரிக்கப்பட்டுள்ளன.

வங்கியின் விதிப்பனவுகள் பட்டியலின் விபரங்கள் வங்கியின் இலங்கையிலுள்ள கிளைகளில் பார்வைக்கு வைக்கப்படும் விளம்பரங்கள் மற்றும்/அல்லது www.hsbc.lk என்ற வங்கியின் வலைத்தளம் மூலம் கணக்கு வைப்பாளருக்கு/வைப்பாளர்களுக்கு தெரிவிக்கப்படும் என்பதுடன், அவை கணக்கு வைப்பாளரை/வைப்பாளர்களை பிணிப்பவையாகவும் அமையும்.

**20. கணக்குகளை மூடிவிடுதல்**

20.1 ஏதேனும் ஒரு கணக்கை ஆரம்பிப்பதற்கு மறுக்கவும் கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) அவரது (அவர்களது) கடைசியாகப் பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு இருபது (20) வேலை நாட்களுக்கு முன் எழுத்துமூல அறிவித்தலைக் கொடுத்துவிட்டு, எவ்வித காரணமும் காட்டாமல் கணக்கை மூடிவிடவும் வங்கிக்கு உரிமையுண்டு.

ஒரு கணக்கின் மீதியானது தொடர்ச்சியாக ஒரு (01) மாதத்திற்குப் பூச்சியமாக (0) இருக்குமாயின், அக் கணக்கை மூடிவிடுவதற்கு வங்கி உரிமை கொண்டுள்ளது. கணக்கு மீதி பூச்சியமாக (0) இருக்கும் சந்தர்ப்பத்தில் வங்கி அது பற்றி கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) அறிவிக்கும்.

20.2 நடைமுறையிலுள்ள நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டுப் பிரமாணங்கள் மீறப்பட்டுள்ளன என்று வங்கி திருப்திகரமான முறையில் கருதுமாயின், வங்கியானது கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) முன்னறிவித்தல் கொடுக்காமல் தனது சுய தீர்மானத்தின் பேரில் கணக்கை மூடிவிடும்.

**21. தகவல்களின் வெளிப்படுத்துகை**

21.1 கணக்கு வைபாளரின் (வைப்பாளர்களின்) கணக்கு(கள்) மற்றும்/அல்லது கணக்கு வைபாளரின் (வைப்பாளர்களின்) சார்பில் வங்கியினால் செயற்படுத்தப்படும் கொடுக்கல் வாங்கல்(கள்) தொடர்பான தகவல்களை, ஏதேனும் சட்டத்தினால், விதிகளினால் அல்லது கணக்கு வைப்பாளரின் (வைப்பாளர்களின்) சார்பில் வங்கியானது கொடுக்கல் வாங்கல்களைச் செயற்படுத்தும் தகுதி வாய்ந்த நியாயாதிக்கத்தின் பிரமாணங்களினால் அல்லது ஏதேனும் பரிவர்த்தனை அமைப்பினால் அல்லது அரசாங்கத்தினால் அல்லது அத்தகைய நியாயாதிக்கப் பிரதேசத்திலுள்ள ஒழுங்குபடுத்தும் அதிகார சபையினால் தேவைப்படுத்தப்படும் ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு வெளியிடவும் வழங்கவும் கணக்கு வைப்பாளர்(கள்) வங்கிக்கு அதிகாரம் அளிக்கிறார் (அளிக்கிறார்கள்).

21.2 இலங்கை மத்திய வங்கியின் நிதித் தகவல் பிரிவினால் காலத்திற்குக் காலம் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படும் மட்டத்திற்கு மேலான சகல வைப்புக்கள் பற்றியும் திருத்தப்பட்ட 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் கீழ் அறிக்கையிட வங்கி கட்டுப்பட்டுள்ளது.

21.3 HSBC குழுமத்திற்கு அல்லது வங்கிக்குப் பொருத்தமான சட்டங்களுக்கும் பணம் தூயதாக்குதல், பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல், தடைகளுக்கு உள்ளாக்கப்பட்ட நபர்களுக்கு அல்லது அமைப்புக்களுக்கு நிதி மற்றும் ஏனைய சேவைகளை வழங்குதல் ஆகியவை தொடர்பான குழுமப் பிரமாணங்களுக்கும் அமைந்து நடக்க வங்கியும் HSBC குழுமத்தின் ஏனைய அங்கத்துவ அமைப்புக்களும் தேவைப்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே, அத்தகைய சட்டங்கள் மற்றும் குழுமப் பிரமாணங்களுக்கு அமைந்தவை என்று வங்கி தனது பூரண தற்றுணிபின் பேரில் கருதும் ஏதேனும் நடவடிக்கைகளை எடுக்க உரிமை கொண்டுள்ளது.

அத்தகைய நடவக்கைகளுள் கணக்கு வைப்பாளரினால் (வைப்பாளர்களினால்) அல்லது அவரின் (அவர்களின்) சார்பில் வங்கி அமைப்பினூடாக அல்லது HSBC குழுமத்தின் வேறேதும் அங்கத்துவ அமைப்பினூடாக அனுப்பப்படும் ஏதேனும் கொடுப்பனவுச் செய்திகளை இடைநிறுத்தி விசாரணை செய்தல், ஏதேனுமொரு பெயர் தடை செய்யப்பட்ட ஒரு நபரின் அல்லது நிறுவனத்தின் பெயரா என்பதை விசாரித்தல் ஆகியனவும் (ஆனால், அவை மட்டுமல்ல) உள்ளடங்கும்.

பின்வருவனவற்றின் விளைவாக ஏதேனுமொரு தரப்பிற்கு ஏற்படக்கூடிய இழப்பு (இது நேரடியானதாக அல்லது விளைவானதாக இருக்கலாம் என்பதுடன் இலாபம் அல்லது வட்டியின் இழப்பையும் உள்ளடக்கும்) அல்லது சேதத்திற்கு வங்கி அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்துவ நிறுவனம் பொறுப்பாளியாகாது:

21.3.1 இத்தகைய சகல சட்டங்களுக்கும் பிரமாணங்களுக்கும் அமைவாக வங்கியானது தனது பூரண தற்றுணிபின் பேரில் பொருத்தமெனக் கருதி எடுக்கும் ஏதேனும் நடவடிக்கைகளினால், இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஏனைய கடப்பாடுகளின் கீழ் தமது ஏதேனும் கடமைகளைச் செய்வதில் வங்கியினால் அல்லது HSBC குழுமத்தின் அங்கத்துவ அமைப்பு ஒன்றினால் புரியப்படும் ஏதேனும் தாமதம் அல்லது தவறுகை.

21.3.2 இச் சரத்தின் கீழ் வங்கியானது தனது உரிமைகளில் எதையேனும் பிரயோகித்தல். சில சமயங்களில், வங்கி எடுக்கக்கூடிய நடவடிக்கையினால் சில தகவல்களை செயற்படுத்தும் அலுவல் தடைப்படலாம் அல்லது தாமதமடையலாம். ஆகவே, இந்தச் சரத்துக்கு அமைவான நடவடிக்கை எடுக்கப்படும் காலப்பகுதியில், சம்பந்தப்பட்ட நடவடிக்கைக்குரிய ஏதேனும் கொடுப்பனவுச் செய்திகள் மற்றும் தொடர்பாடல்கள் தொடர்பாக வங்கியின் அமைப்புக்களிலுள்ள ஏதேனும் தகவல்கள் முற்றிலும் சரியானவை, தற்போதுள்ளவை அல்லது மிகப் புதியவை என்று வங்கியோ HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அமைப்போ உறுதிப்படுத்த மாட்டாது. மேலாதிக்கம் செலுத்தக்கூடிய ஏதேனும் சட்ட மற்றும் குழுமப் பிரமாணங்களின் தேவைப்படுத்தல்களுக்கு முரணாகாத வகையில், வங்கியானது அத்தகைய சூழ்நிலைகள் பற்றி முடியுமானளவு விரைவில் கணக்கு வைப்பாளருக்கு (வைப்பாளர்களுக்கு) அறிவிக்கும்.

## 22. வாடிக்கையாளர் பற்றிய தகவல்களின் சேகரிப்பு, செயற்படுத்தல், பகிர்ந்துகொள்ளல் மற்றும் வாடிக்கையாளரின் கடப்பாடுகள்

**சேகரிப்பு**

22.1 HSBCயும் HSBC குழுமத்தின் ஏனைய அங்கத்தவர்களும் வாடிக்கையாளர் தகவல்களை (வாடிக்கையாளர், வாடிக்கையாளரின் கொடுக்கல் வாங்கல்கள், வாடிக்கையாளர் பயன்படுத்தும் HSBC வங்கி வசதிகள் மற்றும் சேவைகள், வாடிக்கையாளர் HSBC உடன் கொண்டுள்ள உறவுகள் பற்றிய பொருத்தமான தகவல்களும் உள்ளடங்கும்) சேகரிக்க, பயன்படுத்த மற்றும் பகிர்ந்துகொள்ள முடியும். வாடிக்கையாளர் தகவல்கள் சம்பந்தப்பட்ட வாடிக்கையாளரிடமிருந்து (அல்லது அவரின் சார்பில் செயற்படும் ஒருவரிடமிருந்து) கோரப்படலாம். அல்லது இத் தகவல்கள் HSBCயினால் அல்லது HSBCயின் சார்பில் அல்லது HSBC குழும அங்கத்தவர்களினால் வேறு இடங்களிலிருந்து (பகிரங்கமாகக் கிடைக்கும் தகவல்களும் உட்படும்) HSBCக்கு அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்குக் கிடைக்கும் தகவல்களிலிருந்து உருவாக்கப்படலாம் அல்லது இணைத்துக்கொள்ளப்படலாம்.

**செயற்படுத்தல்**

22.2 HSBC மற்றும்/அல்லது HSBC குழுமத்தின் அங்கத்தவர்கள் பின்வரும் நோக்கங்கள் தொடர்பில் வாடிக்கையாளர் தகவல்களை செயற்படுத்தவும் பரிமாற்றம் செய்யவும் வெளிப்படுத்தவும் முடியும்: (a) சேவைகளை வழங்குவதற்காகவும் வாடிக்கையாளரினால் கோரப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்காக. (b) பணிந்தொழுகுதல் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக. (c) நிதிசார் குற்ற இடர் முகாமை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக. (d) வாடிக்கையாளரிடமிருந்து கிடைக்க வேண்டிய ஏதேனும் தொகைகளைச் சேகரிப்பதற்காக. (e) கடன் தகுதியைப் பரிசோதித்து, கடன் சிபாரிசைப் பெறுவதற்காக அல்லது வழங்குவதற்காக. (f) HSBCயின் அல்லது HSBC குழுமத்தின் உரிமைகளை அமுல் செய்வதற்காக அல்லது பாதுகாப்பதற்காக. (g) HSBCயின் அல்லது HSBC குழுமத்தின் உள்ளகச் செயற்பாட்டுத் தேவைகளுக்காக (கடன் மற்றும் இடர் முகாமை, அமைப்பு அல்லது திட்டம் ஒன்றின் அபிவிருத்தி மற்றும் திட்டமிடல், காப்புறுதி, கணக்காய்வு மற்றும் நிர்வாக நோக்கங்களும் உள்ளடங்கும்). (h) வாடிக்கையாளருடன் HSBC ஒட்டுமொத்த உறவுகளைப் பேணுவதற்காக (சந்தைப்படுத்தல் அல்லது நிதிச் சேவைகளின் ஊக்குவிப்பு அல்லது வாடிக்கையாளருக்கான தொடர்புடைய வங்கி வசதிகள், சந்தை ஆய்வு போன்றவை) (நோக்கங்கள்).

**பகிர்ந்துகொள்ளல்**

22.3 HSBC (அதன் நோக்கங்களுக்கு அவசியமெனவும் பொருத்தமெனவும் கருதும்) வாடிக்கையாளர் தகவல்களை பின்வரும் பெறுநர்களுக்கு (அவர்களும் தமது நோக்கங்களுக்காக அத் தகவல்களைச் செயற்படுத்தவும் பரிமாற்றம் செய்யவும் வெளிப்படுத்தவும் முடியும்) அனுப்பவும் வெளிப்படுத்தவும் முடியும் என்பதை வாடிக்கையாளர் இச் சேவைகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்றுக்கொள்கிறார்.

(a) HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவர்;

(b) எவரேனும் உப ஒப்பந்தகாரர்கள், முகவர்கள், சேவை வழங்குநர்கள். HSBC குழுமத்தின இணையாளிகள் (அவர்களின் ஊழியர்கள், பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகள்);

(c) வாடிக்கையாளரின் சார்பில் செயற்படுபவர்கள், கொடுப்பனவைப் பெறுபவர்கள், பயனடைபவர்கள், கணக்கு நியமத்தர்கள், இடையீட்டாளர்கள், பிரதிநிதித்துவ மற்றும் முகவர் வங்கிகள், கிளியரிங் நிலையங்கள். கிளியரிங் அல்லது தீர்ப்பனவு

அமைப்புக்கள், சந்தைப் பங்காளிகள், எதிர்நீரோட்ட இடைநிறுத்தல் முகவரகங்கள், பரிமாற்ற அல்லது வர்த்தக வைப்பகங்கள், பங்குப் பரிவர்த்தனைகள், வாடிக்கையாளருக்கு அக்கறையுள்ள பிணையங்களை கொண்டிருக்கும் கம்பனிகள் (வாடிக்கையாளருக்காக HSBCயினால் பிணையங்கள் வைக்க்ப்பட்டிருக்கும் இடங்கள்);

(d) சேவைகளில் அல்லது சேவைகள் அக்கறையைப் பெறும் அல்லது இடர் பொறுப்பை ஏற்கும் தரப்பினர்;

(e) கடன் சிபாரிசுகளைப் பெறுவதற்காக அல்லது வழங்குவதற்காக வேறு நிதி நிறுவனங்கள், கடன் சிபாரிசு நிலையங்கள் அல்லது கொடுகடன் தகவல் பணியகம் மற்றும் கணக்காய்வாளர்கள்/வரி ஆலோசகர்கள்;

(f) வாடிக்கையாளருக்கு சொத்து முகாமைச் சேவைகளை வழங்கும் எவரேனும் மூன்றாம் தரப்பு நிதி முகாமையாளர்;

(g) HSBCயினால் அறிமுகப்படுத்தல்கள் அல்லது சிபாரிசுகள் வழங்கப்படும் அறிமுகப்படுத்தும் தரகர்;

(h) HSBCயின் ஏதேனும் வியாபார இடமாற்றம், விற்பனை, ஒருங்கிணைப்பு அல்லது சுவீகரிப்பு தொடர்பில்;

சேவைகள் வழங்கப்படும் நியாயாதிக்கப் பிரதேசத்தில் அமுலிலுள்ள தரவுப் பாதுகாப்பு மட்டத்திலான தரவுப் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டிராத நியாயாதிக்கப் பிரதேசங்கள் உட்பட அனைத்து இடங்களிலும் மேற்குறிப்பிட்டவை செல்லுபடியாகும்.

**வாடிக்கையாளர் கடப்பாடுகள்**

22.4 காலத்திற்குக் காலமும் HSBC அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவர் விடுத்த வேண்டுகோளின் பேரிலும் HSBCக்கு அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கு வழங்கப்பட்ட வாடிக்கையாளர் தகவல்களில் ஏதேனும் மாற்றம் ஏற்படின், அதனை உடனடியாக, அல்லது எவ்வாறாயினும் 30 தினங்களுக்குள், எழுத்து மூலம் HSBCக்கு அறிவிக்க வாடிக்கையாளர் இணங்குகின்றார்.

22.5 வாடிக்கையாளர் இணைக்கப்பட்ட ஒரு நபரின்/நபர்களின் தகவல்களை (தனிப்பட்ட விபரங்கள் அல்லது வரித் தகவல்களும் உட்படும்) HSBCக்கு அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கு வழங்குவதற்கு முன், அத்தகைய நபருக்கு/நபர்களுக்கு அது பற்றி அறிவித்து, இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு அத் தகவல்களின் செயற்படுத்தல், வெளிப்படுத்தல் மற்றும் பரிமாற்றத்திற்கான ஒப்புதல் பெறப்பட்டுள்ளதை ஊர்ஜிதம் செய்ய வேண்டும். இணைக்கப்பட்ட நபர்கள் தமது தனிப்பட்ட தகவல்களைப் பரிசீலிக்கவும் வேண்டுமானால் திருத்தம் செய்யவும் உரிமை கொண்டுள்ளார்கள் என்பதை வாடிக்கையாளர் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

22.6 பின்வரும் சந்தர்ப்பங்களில்:

- HSBC நியாயமான முறையில் கோரும் வாடிக்கையாளர் தகவல்களை வழங்க ஒரு வாடிக்கையாளர் தவறினால்,

அல்லது

- குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக வாடிக்கையாளர் தகவல்களைச் செயற்படுத்த, பரிமாற அல்லது வெளிப்படுத்த HSBCக்கு தேவைப்படும் ஏதேனும் சம்மதத்தை வாடிக்கையாளர் இடைநிறுத்தினால் அல்லது வாபஸ் பெற்றால், அல்லது
- நிதிசார் குற்றம் இழைக்கப்படும் சாத்தியம் உள்ளதென அல்லது ஒரு வாடிக்கையாளர் HSBC குழுமத்தின் அங்கத்தவர் ஒருவருக்கு நிதிசார் குற்ற இடரை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளதென வங்கி அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவர் சந்தேகித்தால்

HSBC ஆனது:

(a) வாடிக்கையாளருக்குப் புதிய சேவையை வழங்க அல்லது தற்போதய சேவைகளில் அனைத்தையும் அல்லது அதிலொரு பகுதியைத் தொடர்ந்து வழங்க முடியாதிருக்கும். வாடிக்கையாளருடன் தனது வியாபார உறவுகளை முடிவுறுத்தும் உரிமையும் அதற்கு உண்டு;

(b) கடப்பாடுகளின் அனுசரிப்பை உறுதிப்படுத்த HSBCக்கு அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்கும். மற்றும்/அல்லது,

(c) வாடிக்கையாளரின் கணக்கை (கணக்குகளை) தடைசெய்ய, இடம்மாற்ற அல்லது மூடிவிட நடவடிக்கை எடுக்கும்.

22.7 வாடிக்கையாளர் பின்வருமாறு உறுதியளித்து ஊர்ஜிதம் செய்கின்றார்:

22.7.1 (i) வாடிக்கையாளராகிய (ii) வாடிக்கையாளரின் ஊழியர்கள் அல்லது முகவர்களில் ஒருவராகிய நான் (**"**நான்**"**):

a) ஐக்கிய அமெரிக்க திறைசேரித் திணைக்களத்தின் வெளிநாட்டுச் சொத்துகள் கட்டுப்பாட்டு அலுவலகம், ஐக்கிய அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை, ஐரோப்பிய ஒன்றியம், மேன்மைதங்கிய மகாராணியின் திறைசேரி, ஹொங்கொங் நாணய அதிகார சபை, இலங்கை அரசாங்கம் மற்றும் வேறேதும் பொருத்தமான தடையுத்தரவு அதிகார அமைப்புக்களினால் (கூட்டாக, "தடையுத்தரவுகள்") நிர்வகிக்கக்கடும் அல்லது அமுலாக்கப்படும் தடையுத்தரவுகளுக்கு உள்ளாக்கப்படவில்லை.

b) கிரீமியா பிரதேசம், கியூபா, ஈரான், வட கொரியா, சூடான் மற்றும் சிரியா உட்பட தடையுத்தரவுக்கு உள்ளாக்கப்பட்ட நாடுகள்/பிராந்தியங்கள் அல்லது பிரதேசங்களில் மற்றும் தடையுத்தரவுக்கு உள்ளாக்கப்பட்ட அரசாங்கங்கள் ஆட்சியிலிருக்கும் நாடுகள்/பிராந்தியங்கள் அல்லது பிரதேசங்களில் தங்கியிருக்கவோ வசிக்கவோ இல்லை.

22.7.2 ஏதேனும் கணக்கிலுள்ள பணத்தை அல்லது வங்கியினால் வழங்கப்பட்ட நிதி வசதியை பின்வரும் நோக்கங்களுக்கு நேரடியாகவோ அல்லது நேரடியாக அல்லாமலோ பயன்படுத்தக் கூடாது என்பதற்கும் அத்தகைய பணத்தை ஏதேனும் உப நிறுவனம், கூட்டு முயற்சியின் பங்காளி அல்லது வேறொரு நபருக்குக் கடனளிக்கவோ, பங்களிப்புச் செய்யவோ அல்லது வேறு வழியில் கிடைக்கச் செய்யவோ கூடாது என்பதற்கும் வாடிக்கையாளர் இணங்குகின்றார்:

a) தடையுத்தரவுக்கு அந்த வேளையில் ஆளாக்கப்பட்டிருக்கும் ஒரு நாட்டில் /பிராந்தியத்தில் அல்லது பிரதேசத்தில் அல்லது தடையுத்தருவுக்கு ஆளாக்கப்பட்ட அரசாங்கம் பதவியிலிருக்கும் ஒரு நாட்டில்/பிராந்தியத்தில் அல்லது பிரதேசத்தில் வசிக்கும் எவரினதும் அல்லது எவருடனுமான ஏதேனும் நடவடிக்கைகள் அல்லது வியாபாரத்திற்கு நிதி வழங்குதல்.

b) எவரேனும் நபர் தடையுத்தரவை மீறுவதற்கு இடமளிக்கும் வகையில் வேறேதும் வகையில் செயற்படுதல்.

22.7.3 ஐக்கிய இராச்சியத்தின் இலஞ்ச அதிகாரச் சட்டம் 2010 (the "**UK** லஞ்ச சட்டம்") மற்றும் ஐக்கிய அமெரிக்க வெளிநாட்டு ஊழல் நடைமுறைகள் திகாரச் சட்டம் 1977 (the "**FCPA**"). என்பன உள்ளிட்ட (ஆனால் அவை மட்டுமல்ல) ஏற்புடைய இலஞ்ச எதிர்ப்புச் சட்டம் எதுவும் மீறப்படுவதற்கு வழிகோலக்கூடிய நேரடி அல்லது நேரடியற்ற நடவடிக்கைகள் எதையும் வாடிக்கையாளர் அல்லது வாடிக்கையாளரின் சார்பில் செயற்படும் ஏனைய நபர்கள் அறிந்திருக்கவில்லை அல்லது எடுத்திருக்கவில்லை. மேலும், வாடிக்கையாளர் தனது வியாபாரங்களை ஐக்கிய இராச்சியத்தின் இலஞ்ச அதிகாரச் சட்டம், ஐக்கிய அமெரிக்க வெளிநாட்டு ஊழல் நடைமுறைகள் அதிகாரச் சட்டம் மற்றும் அது போன்ற சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு அமைவாகவே நடத்தியுள்ளார் என்பதுடன், அவை இணங்கியொழுகப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் தொடர்ந்து இணங்கியொழுகப்படுவதை உறுதிப்படுத்துமென நியாயமான முறையில் எதிர்பார்க்கக்கூடியதுமான கொள்கைகளையும் நடைமுறைகளையும் நிறுவிப் பேணிவருகின்றார். ஏற்புடைய ஏதேனும் இலஞ்ச எதிர்ப்புச் சட்டத்தை மீறக்கூடிய வகையிலான கொடுப்பனவுகளுக்காக எவ்விதமான கணக்குகளோ அல்லது சேவைகளோ நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் பயன்படுத்தப்பட மாட்டாது என்று வாடிக்கையாளர் உறுதியளிக்கின்றார்.

ஏற்புடைய ஏதேனும் இலஞ்ச எதிர்ப்புச் சட்டத்தை மீறக்கூடிய வகையிலான கொடுப்பனவுகளுக்காக எவ்விதமான கணக்குகளோ அல்லது சேவைகளோ நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் பயன்படுத்தப்பட மாட்டாது என்று வாடிக்கையாளர் உறுதியளிக்கின்றார்.

22.7.4 வாடிக்கையாளர் அல்லது அவரது ஏதேனும் உப நிறுவனங்களின் மீது நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள ஏதேனும் அரசாங்க நிறுவனத்தினால் விடுக்கப்பட்டு, நிர்வகிக்கப்படும் அல்லது அமுலாக்கம் செய்யப்படும் நிதிப் பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் அறிக்கையிடல் தொடர்பான ஏற்புடைய தேவைகள், பணம் தூயதாக்கல் சட்டங்கள் அவற்றின் கீழான விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் தொடர்புடைய அல்லது அவை போன்ற எவையேனும் விதிகள், பிரமாணங்கள் அல்லது வழிகாட்டுதல்கள் (கூட்டாக, **"**பணம் தூயதாக்கல் சட்டங்கள்**"** எனப்படும்) அனைத்திற்கும் வாடிக்கையாளர் எல்லா வேளைகளிலும் இணங்கியொழுக வேண்டும். பணம் தூயதாக்கல் சட்டங்களின் கீழ் வாடிக்கையாளர், அவரது முகவர்கள் அல்லது ஊழியர்கள் சம்பந்தப்பட்ட சட்ட நடவடிக்கை, விசாரணை மற்றும் வழக்கு எதுவும் எந்தவொரு நீதிமன்றம், அரசாங்க நிறுவனம், அதிகார அமைப்பு அல்லது நியாயத்தீர்ப்பு

மன்றத்தின் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கக் கூடாது அல்லது அறிவுக்கெட்டிய வரை சமர்ப்பிக்கப்படும் சாத்தியமும் இருக்கக்கூடாது.

22.8 கணக்கு வைத்திருப்பவர்/கள் காலத்திற்குக் காலம் நடைமுறையிலிருக்கும் சட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் வங்கியின் கொள்கைகளுக்கு அமைவாக வங்கியினால் வழங்கப்பட்ட டெபிற் கார்ட்களை, virtual நாணயங்கள், crypto நாணயங்கள் மற்றும் bitcoinsகளை வாங்குதல், விற்பனை செய்தல் அல்லது பயன்படுத்துதல் மற்றும்/அல்லது வெளிநாட்டு நாணயமாற்று வர்த்தகம், மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வெளிநாட்டு நாணயப் பரிமாற்றங்களைச் செய்தல் உள்ளிட்ட (ஆனால் அவை மட்டுமல்ல) காரியங்களுக்குப் பயன்படுத்தக் கூடாது.

கணக்கு வைத்திருப்பவர்/கள், இலாப நோக்கமற்ற ஸ்தாபனங்கள், அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் மற்றும் ஏனைய தரும ஸ்தாபனங்களிடம் இருந்து தரும நோக்கங்களுக்கான பணத்தை/ நன்கொடைகளைப் பெறுவதற்குத் தனது/தமது கணக்கை/கணக்குகளை பயன்படுத்தக் கூடாது. தனிப்பட்ட தன்மையிலான கொடுக்கல் வாங்கல்களுக்கு மட்டுமே தனிப்பட்ட கணக்கு/கள் உபயோகிக்கப்பட வேண்டும். காலத்திற்குக் காலம் நடைமுறையிலிருக்கும் சட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் வங்கியின் கொள்கைகளுக்கு அமைய, தனிப்பட்ட கணக்கின்/ கணக்குகளின் ஊடாக வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களைச் செய்ய முடியாது.

**23. தரவுகளின் பாதுகாப்பு**

23.1 வாடிக்கையாளர் தரவுகள் உள்நாட்டு நியாயாதிக்கத்தில் செயற்படுத்தப்பட்டாலும் வெளிநாட்டில் செயற்படுத்தப்பட்டாலும், தரவுப் பாதுகாப்பு சட்டத்திற்கு அமைவாக, அத் தரவுகள் அனைத்தும் HSBC குழுமத்தின் அங்கத்துவ நிறுவனங்கள், அவற்றின் ஊழியர்கள் மற்றும் மூன்றாம் தரப்பினர் கடைப்பிடிக்கும் கண்டிப்பான இரகசிய குறியீடு மற்றும் பாதுகாப்பு ஏற்பாட்டின் மூலம் பாதுகாக்கப்படும்.

## 24. நிதிசார் குற்ற இடர் முகாமைத்துவநடவடிக்கைகள்

24.1 நிதிசார் குற்றங்களின் கண்டுபிடிப்பு, விசாரணை மற்றும் தடுப்பு தொடர்பான சட்டங்கள், பிரமாணங்கள். தடையுத்தரவுகள், சர்வதேச வழிகாட்டுதல்கள், HSBC குழமத்தின் உள்ளகக் கொள்கைகளும் நடைமுறைகளும், மற்றும்/அல்லது ஏதேனும் அதிகார சபைகளின் கோரிக்கைகள் என்பவற்றிற்குப் பணிந்தொழுகுவதற்காக HSBCயும் HSBC குழமத்தின் அங்கத்தவர்களும் பொருத்தமெனக் கருதும் ஏதேனும் நடவடிக்கைகளை (அவற்றின் தனி மற்றும் பூரண சுயதீர்மானத்திற்கேற்ப) எடுக்க வேண்டும் என்பதுடன் எடுக்கவும் முடியும் ("நிதிசார் குற்ற இடர் முகாமை நடவடிக்கைகள்").

அத்தகைய நடவடிக்கைகளுள் (a) வாடிக்கையாளரினால் அல்லது அவரின் சார்பில் அனுப்பப்படும் அல்லது பெறப்படும் ஏதேனும் அறிவுறுத்தல், தொடர்பாடல், திரும்பப் பெறும் வேண்டுகோள், சேவைகளுக்கான விண்ணப்பம் அல்லது ஏதேனும் கொடுப்பனவைப் பரிசோதித்தல், இடைமறித்தல் மற்றும் விசாரித்தல், (b) நிதிகளின் மூலவிடம் அல்லது அவற்றின் உத்தேச பெறுநர்கள் பற்றி விசாரித்தல், (c) வாடிக்கையாளர் தகவல்களை ர்ளுடீஊ குழமத்திடமிருக்கும் ஏனைய தொடர்புடைய தகவல்களுடன் இணைத்தல், மற்றும்/அல்லது (d) சம்பந்தப்பட்ட நபர் அல்லது நிறுவனத்தின் மீது தடையுத்தரவு உள்ளதா என்பதை அறிவதற்காக அல்லது வாடிக்கையாளரின் அடையாளம் மற்றும் அந்தஸ்தை ஊர்ஜிதம் செய்வதற்காக மேலும் விசாரணைகளை மேற்கொள்ளுதல்.

24.2 நிதிசார் குற்ற இடர் முகாமை நடவடிக்கைகளை HSBC மேற்கொள்வதால் ஏதேனும் கொடுப்பனவு செய்யப்படுதல் அல்லது கிளியரிங் செய்யப்படுதல், வாடிக்கையாளரின் அறிவுறுத்தல்கள் அல்லது சேவைகளுக்கான விண்ணப்பங்கள் செயற்படுத்தப்படுதல் அல்லது சேவைகளின் முழுமையான அல்லது பகுதியான வழங்கல் என்பன அபூர்வமான சந்தர்ப்பங்களில் HSBC யினால் தாமதிக்கப்படலாம், தடைசெய்யப்படலாம் அல்லது மறுக்கப்படலாம். நிதிசார் குற்ற இடர் முகாமை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் வாடிக்கையாளருக்கு அல்லது மூன்றாம் தரப்பிற்கு முழுமையாக அல்லது பகுதியளவில் ஏதேனும் இழப்பு ஏற்படுமாயின், அது தொடர்பில், சட்டம் அனுமதிக்கு அளவிற்கு, HSBC வங்கியோ அல்லது HSBC குழுமத்தின் அங்கத்தவரோ வாடிக்கையாளருக்கு அல்லது ஏதேனும் மூன்றாம் தரப்பிற்கு பொறுப்பாளியாகத் தேவையில்லை.

**25. வரி இணக்கப்பாடு**

வரிக் கடப்பாடுகள் எழுகின்ற சகல நியாயாதிக்கப் பிரதேசங்களிலும் எம்மால் அல்லது HSBC குழுமத்தின் அங்கத்தவர்களினால் வழங்கப்படும் கணக்கின் (கணக்குகளின்) ல்லது சேவைகளின் ஆரம்பம் மற்றும் பயன்படுத்தல் தொடர்பிலும் உங்கள் வரிக் கடப்பாடுகளை புரிந்துகொள்வதும் அவற்றிற்கு இணங்கி நடப்பதும் முழுக்க முழுக்க உங்கள் பொறுப்பாகும் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்கள் (வரிகளைச் செலுத்துதல், வருமான வரிப் படிவங்கள் மற்றும் பொருத்தமான வரிகள் தொடர்பாகத் தேவைப்படுத்தப்படும் ஆவணங்களை நிரப்புதல் என்பனவும் இக் கடப்பாடுகளில் உள்ளடங்கும்). ஒவ்வொரு இணைக்கப்பட்ட நபரும், ஓர் இணைக்கப்பட்ட நபர் என்ற முறையில் (அவரது தனிப்பட்ட முறையில் அல்ல) தனது விடயத்தில் இதே ஒப்புதலை வழங்க வேண்டும். ணைக்கப்பட்ட நபரின் அல்லது உங்களின் வாழிட நாடு, வசிப்பிடம், பிராஜாவுரிமை அல்லது ட்டிணைப்பு என்பவற்றைக் கருத்திற்கெடுக்காத, பிரதேச வரையறையற்ற வரிச் சட்டங்களைச்சில நாடுகள் கொண்டிருக்கலாம். நாமோ அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவரோ வரி ஆலோசனைகளை வழங்குவதில்லை. நீங்கள் சுயாதீன தரப்பினரிடமிருந்து சட்ட மற்றும் வரி ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம். எந்தவொரு நியாயாதிக்கப் பிரதேசத்திலாவது ஏற்படக்கூடிய உங்கள் வரிக் கடப்பாடுகள் தொடர்பாக எமக்கோ அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கோ எவ்வித பொறுப்பும் கிடையாது. குறிப்பாக, எம்மால் அல்லது HSBC குழுமத்தின் அங்கத்தவர்களினால் வழங்கப்படும் கணக்கின் (கணக்குகளின்) அல்லது சேவைகளின் ஆரம்பம் மற்றும் பயன்படுத்தல் தொடர்பில் ஏற்படுகின்ற கடப்பாடுகளும் இவற்றில் அடங்கும்.

**26. வங்கியின் பாத்திய மற்றும் எதிரீட்டு உரிமை**

ஏதேனும் கணக்கின் பேரில் பிணையின் மூலம் வங்கி கொண்டிருக்கும் ஏதேனும் பொதுப் பாத்தியம், எதிரீட்டு உரிமை அல்லது வேறேதும் உரிமைக்குக்குப் பாதிப்பு இல்லாமலும் அவற்றிற்கு மேலதிகமாகவும், வங்கியானது காலத்திற்குக் காலம் எந்த நேரத்திலும் கணக்கு வைப்பாளர்(கள்) தனியாக அல்லது இன்னுமொருவருடன் சேர்ந்து கூட்டாக வத்திருக்கக்கூடிய சகல அல்லது ஏதேனும் கணக்கை அல்லது கணக்குகள் மற்றும் வங்கிக்கான பொறுப்புக்களை ஒன்றுசேர்த்து அல்லது ஒருங்கிணைத்து, அக் கணக்கில் (கணக்குகளில்) வரவாகவுள்ள பணத்தை, கணக்கு வைப்பாளரின் (வைப்பாளர்களின்) வங்கிக்கான ஏதேனும் பொறுப்புக்களை (அப் பொறுப்புக்கள் பிரதான அல்லது பிணை, உண்மையான அல்லது தற்செயலான, அடிப்படையான அல்லது ஒப்பந்த, தனியான அல்லது இன்னுமொருவருடன் சேர்ந்து கூட்டான பொறுப்புக்களாக இருக்கலாம்) நிறைவேற்றுவதற்காக எதிரீடு செய்வதற்குப் பயன்படுத்த முடியும்.

இந்த விடயத்தில், வங்கியானது அவ் வேளையில் நிலவும் வங்கியின் பரிவா்த்தனை வீதங்களுக்கேற்ப அவசியமான நாணயப் பரிவா்த்தனைகளைச் செய்யவும் முடியும்.

மேலுள்ள சரத்தின் கீழ் வங்கி கொண்டுள்ள உரிமைகள் வாடிக்கையாளரின் மரணம், வங்குரோத்து நிலை அல்லது சட்டபூர்வ இயலாமையினால் பாதிக்கப்பட மாட்டாது.

**27. கூட்டுக் கணக்குகள்**

27.1 இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள சகல ஏனைய விதிகளுக்கும் மேலதிகமாக, பின்வருவனவற்றையும் தான்/தாம் நன்கு அறிந்துள்ளதாக கணக்கு வைப்பாளா்(கள்) பிரகடனம் செய்கிறாா்(கள்):

27.1.1 கூட்டுக் கணக்கொன்றின் கணக்கு வைப்பாளா்களில் ஒருவா் மரணமடையும் பட்சத்தில், அக் கணக்கில் வரவாக எஞ்சியுள்ள பணம் உயிருடனிருக்கும் கணக்கு வைப்பாளருக்கு அல்லது கணக்கு வைப்பாளா்களுக்கு வழங்கப்படும். மரணம் பற்றிய அறிவித்தலும் அது தொடா்பில் வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆதாரமும் வங்கிக்கு வழங்கப்படும் வரை, செயற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கேற்ப பணம் வழங்கப்படுவது தொடா்பில் எந்தவொரு கூட்டுக் கணக்கு வைப்பாளரும் வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது.

27.1.2 கூட்டுக் கணக்கு வைப்பாளா் ஒருவரின் மரணம் பற்றிய அறிவித்தல் கிடைத்ததும், வங்கியிடமுள்ள ஏதேனும் கணக்கில் அல்லது கணக்குகளில் வரவாக இருக்கும் அல்லது வைக்கப்பட்டிருக்கும்பணம், பிணையங்கள், உறுதிப்பத்திரங்கள், ஆவணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை கூட்டுக் கணக்கு வைப்பாளா்களில் உயிருடன் இருப்பவருக்கு அல்லது இருப்பவா்களுக்கு அல்லது அவா்களின் கட்டளைப்படி வழங்குவதன் மூலம் வங்கியானது தனது கடமைகளைப் பூரணமாக நிறைவேற்றும் என்பதை ஒவ்வொரு கூட்டுக் கணக்கு வைப்பாளரும் ஏற்றுக்கொள்கிறாா்.

27.1.3 கணக்கின் மூலம் அல்லது வேறு வழியில் மேலதிகப் பற்று அல்லது வேறேதும் கடப்பாடுகள் உறப்படுமாயின், கூட்டுக் காணக்கு வைப்பாளா்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகவும் கூட்டாகவும் அவற்றிற்குப் பொறுப்பாளியாவாா்கள்.

27.1.4 கணக்குத் தொடர்பில் எவரேனுமொரு கணக்கு வைப்பாளரின் அதிகாரம் எவரேனும் ஒருஅல்லது பல (ஆனால், அனைவருமல்ல) கூட்டுக் கணக்கு வைப்பாளர்களினால் மாற்றப்படும் அல்லது இரத்துச் செய்யப்படும் பட்சத்தில் மற்றும்/அல்லது கூட்டுக் கணக்கு வைப்பாளர்களுக்கிடையே பிணக்கு உள்ளதென வங்கிக்கு அறிவிக்கப்படும் பட்சத்தில், கூட்டுக் கணக்கு வைப்பாளர்களினால் வங்கிக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த கையொப்பமிடும் அறிவுறுத்தல்களைக் கருத்திற்கொள்ளாமல், சம்பந்தப்பட்ட கணக்கை சகல கூட்டுக் கணக்கு வைப்பாளர்களும் கூட்டாகச் செயற்படுத்த வேண்டுமெனக் கோருவதற்கு வங்கி தனது பூரண தற்றுணிபின் பேரில் முடிவு செய்யக்கூடும்.

27.1.5 ஒவ்வொரு கணக்கு வைப்பாளரும், இன்னுமொரு கணக்கு வைப்பாளருடன் சேர்ந்த கண்கொன்றைப் பேணினால் அல்லது சேவையொன்றைப் பயன்படுத்தினால் ("கூட்டுக் கையொப்பதாரர்/கள்), அவர்களினால் பேணப்படும் ஒவ்வொரு கணக்கின் கீழும் அவர்களினால் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு சேவையின் கீழும் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் கூட்டுக் கையொப்பதார்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் தனித்தனியாகவும் கூட்டாகவும் பொறுப்பாளியாவார்கள்.

27.1.6 கூட்டுக் கையொப்பதாரர் ஒருவர் தனியாகக் கணக்கொன்றைப் பேணுவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தால், அக் கணக்கிற்காக அல்லது அது தொடர்பில் எவரேனுமொரு கூட்டுக் கையொப்பதாரர் விடுக்கும் அறிவுறுத்தலுக்கு அல்லது வேறேதும் பணிப்புரைகளுக்கு வங்கி இணங்கியொழுகக்கூடும் (வங்கி வேறு விதமாக இணங்கினால் அல்லது தீர்மானித்தாலன்றி).

27.1.7 கூட்டுக் கையொப்பதாரர்களில் எவரேனுமொருவர் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டதும், ஏனைய கூட்டுக் கையொப்பதாரர்களும் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளினால் பிணிக்கப்படுவார்கள்.

27.1.8 பின்வரும் குறைபாடுகளில் எதுவேனும் காணப்பட்டாலும் வங்கி அது பற்றி அறிந்து இருந்தாலும் அல்லது அறிய வேண்டி இருந்தாலும், இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளினாலும் சம்பந்தப்பட்ட கணக்கு அல்லது சேவையை ஆட்சிசெய்யும் ஏனைய நிபந்தனைகளினாலும் ஒவ்வொரு கூட்டுக் கையொப்பதாரரும் பிணிக்கப்படுகின்றார்:

a) இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளினால் அல்லது அத்தகைய வேறேதும் விதிகள் மற்றும் நிபந்தனைகளினால் பிணிக்கப்பட வேண்டிய ஒரு கூட்டுக் கையொப்பதாரர், உண்மையில் அவ்வாறு பிணிக்கப்படவில்லை/அல்லது,

b) இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் எதுவேனும் அல்லது அத்தகைய வேறு விதிகள் மற்றும் நிபந்தனைகள் ஒரு கூட்டுக் கையொப்பதாரரை பொறுத்தவரை செல்லுபடியற்றதாக அல்லது நடைமுறைப்படுத்த முடியாததாக இருத்தல்.

27.1.9 வங்கியானது இன்னுமொரு கூட்டுக் கையொப்பதாரர் தொடர்பில் தனது உரிமைகள், அதிகாரங்கள் மற்றும் நிவாரணங்களை மட்டுப்படுத்தாமல் அல்லது குறைக்காமல் எந்தவொரு எந்தவொரு கூட்டுக் கையொப்பதாரருடனும் விடயம் தொடர்பிலும் வேறாக நடவடிக்கை மேற்கொள்ளக்கூடும். அத்தகைய விடயங்களில் பின்வருவன உள்ளடங்கும்:

a) ஏதேனும் பொறுப்பை ஏதேனும் அளவுக்கு மாற்றுதல் அல்லது நிறைவேற்றுதல்; அல்லது

b) கூடுதல் அவகாசம் அல்லது வேறேதும் சலுகை வழங்குதல் அல்லது வேறு ஏற்பாடுகளைச் செய்தல்.

27.1.10 இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் எவரேனுமொரு கூட்டுக் கையொப்பதாரருக்கு வழங்கப்படும் அறிவித்தல் சகல கூட்டுக் கையொப்பதாரர்களுக்கும் செல்லுபடியானதாகக் கொள்ளப்படும்.

27.1.11 சகல கூட்டுக் கையொப்பதாரர்களுக்கும் பின்வருவனவற்றை வெளியிட வங்கிக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது:

a) கணக்கு பற்றிய ஏதேனும் தகவல் - இது கூட்டுக் கையொப்பதாரர்களின் கூட்டுப் பெயர்களில் கணக்குப் பேணப்படாத காலப்பகுதி தொடர்பானதாக இருக்கக்கூடும்; அத்துடன்,

b) எவரேனும் கூட்டுக் கையொப்பதாரின் அல்லது அவரால் வழங்கப்பட்ட ஏதேனும் தனிப்பட்ட தரவுகள் மற்றும் வேறு தகவல்கள்.

**பொது ஏற்பாடுகள்**

28. நம்பிக்கைப் பொறுப்பகங்களை வங்கி அங்கீகரிப்பதில்லை.

29. கணக்குத் தொடர்பான ஆவணங்களை நுண்படங்களாக (Microfilming) பிடித்த பின்னர், தனது தற்றுணிபின் பேரில் அவற்றை அழித்துவிட வங்கிக்கு உரிமையுண்டு.

மீளப்பெறுகைகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் மீது அதிகார அமைப்புக்களினால் வரையறைகள் விதிக்கப்படும் பட்சத்தில், அத்தகைய வரையறைகளுக்குக் கணக்கு வைப்பாளர்(கள்) கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

30. கணக்கு வைப்பாளரினால்/வைப்பாளர்களினால் கணக்கு ஆரம்ப விண்ணப்பத்தில் அல்லது வேறு வழியில் வழங்கப்பட்டுள்ள சகல தகவல்களும் அவரது/அவர்களது அறிவுக்கெட்டியரை உண்மையானவை மற்றும் சரியானவை என்பதைக் கணக்கு வைப்பாளர்(கள்) உறுதிப்படுத்துகின்றார்/உறுதிப்படுத்துகின்றனர்.

31. ஏதேனும் சந்தைப்படுத்தல் தகவல்கள் மற்றும் விசேட ஊக்குவிப்புத் திட்டங்கள் பற்றிக் கணக்கு வைய்யாளருக்கு அறிவிப்பதற்காக SMS, PIB அல்லது குறித்துரைக்கப்பட்ட ஒரு மின்னஞ்சல் முகவரி மூலம் கணக்கு வைப்பாளருடன் தொடர்பாடலை மேற்கொள்ள கணக்கு வைப்பாளர் வங்கிக்கு அதிகாரமளிக்கிறார்.

32. கணக்குத் தொடர்பிலான விபரக்கூற்றுகள், வவுச்சர்கள், மீளப்பெறுகை/வைப்புச் சீட்டுகள், காசோலைகள் மற்றும் வேறேதும் கொடுக்கல் வாங்கல் பதிவேடுகளின் பிரதிகளை வங்கியானது 7 ஆண்டுகளுக்கு மாத்திரம் வைத்திருக்கும். அத்தகைய சகல திவேடுகளும் 7 ஆண்டுகளின் பின் அழிக்கப்பட்டுவிடும். அதன் பின்னர், அத்தகைய விபரக்கூற்றுகள் அல்லது பதிவேடுகளின் பிரதிகளை வழங்குவது தொடர்பில் வங்கி எவ்வித பொறுப்பையும் ஏற்காது.

33. கணக்குகளில் பற்று வைத்துக் கொடுப்பனவுகளைச் செய்யும்படி கணக்கு வைப்பாளர்/ வைப்பாளர்கள் விடுக்கும் உண்மையான எழுத்துமூல அறிவுறுத்தல்களின் (நிலையான அறிவுறுத்தல்களும் உட்படும்) பேரில் மட்டுமே வங்கி நடவடிக்கை எடுக்கும். இந்த அறிவுறுத்தல்கள் தபால் மூலம் அல்லது வங்கியின் கிளையொன்றிற்கு நேரில் கையளிக்கப்படுவதன் மூலம் வழங்கப்படலாம். குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அத்தகைய ஓர் அறிவுறுத்தல் செயற்படுத்தப்படாததால் ஏற்படக்கூடிய ஏதேனும் உரிமைக் கோரல்கள், இழப்புகள் அல்லது செலவுகளுக்கு வங்கி எவ்விதத்திலும் பொறுப்பாளியாகாது. அதனைப் பொறுப்பாளியாக்கவும் முடியாது.

34. வங்கி தனது தனித் தற்றுணிபின் பேரில் அவ்வாறு செய்தாலன்றி, பண வைப்புகள், பண அல்லது காசோலை மீளப்பெறுகைகள், காசோலை வைப்புக்கள் மற்றும் ஏனைய பற்று/வரவு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான வெவ்வேறான தகவல் அறிக்கைகளை வங்கியானது கணக்கு வைப்பாளர்களுக்குத் தபால் மூலம் அனுப்பாது.

35. இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் ஏதேனும் சேவை, வசதி, வியாபார உறவு, கணக்கு அல்லது கணக்கு வைப்பாளருக்கும்/வைப்பாளர்களுக்கும் இடையிலான ஒப்பந்தங்களுக்கும் இடையே ஏதேனும் முரண்பாடு அல்லது பொருத்தமின்மை காணப்படின், இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளே மேலாதிக்கம் செலுத்தும். வாடிக்கையாளர் தகவல்கள் தொடர்பாக வங்கியினால் கோரப்பட்ட ஏதேனும் சம்மதங்கள், அதிகாரமளிப்புக்கள் மற்றும் ஏற்கனவே நடைமுறையிலுள்ள விலக்களிப்புக்கள், அனுமதிகள் யாவும், பொருத்தமான உள்நாட்டுச் சட்டங்கள் அனுமதிக்கப்படும் அளவுக்கு, முழு வலுவுள்ளதாக தொடர்ந்து நடைமுறையில் இருக்கும்.

35.1 இந்த விதிகளின் ஏற்பாடுகள் அனைத்தும் அல்லது அவற்றின் ஏதேனுமொரு பகுதி ஏதேனுமொரு நியாயாதிக்கப் பிரதேசத்தின் சட்டத்தின் கீழ் சட்டவிரோதமானதாக, செல்லுபடி அற்றதாக அல்லது நடைமுறைப்படுத்த முடியாததாக இருந்தாலும், வேறேதும் நியாயாதிக்கப் பிரதேசத்தில் அத்தகைய ஏற்பாடுகளிதும் அதே நியாயாதிக்கப் பிரதேசத்தில் எஞ்சியுள்ள ஏற்பாடுகளினதும் சட்டவலு, செல்லுபடியாகும் தன்மை, நடைமுறைப்படுத்தும் தன்மை என்பன பாதிக்கப்பட மாட்டா.

35.2 இதன் கீழுள்ள ஏதேனும் அறிவித்தல்கள், கணக்கு வைப்பாளர்/கள் கடைசியாக வங்கிக்கு எழுத்தில் அறிவித்த முகவரிக்குத் தபால் மூலம் அனுப்பப்பட்ட 7 வேலை நாட்களுக்குள் கணக்கு வைப்பாளருக்கு/வைப்பாளர்களுக்கு கிடைத்ததாகக் கொள்ளப்படும்.

35.3 இதன் கீழான ஏதேனும் உரிமை, அதிகாரம் அல்லது சலுகையைப் பிரயோகிப்பதில் வங்கியினால் காட்டப்படும் சகிப்புத்தன்மை, அலட்சியம், தவறுகை, தாமதம் அல்லது தள்ளுபடி எதுவுமே அவற்றின் முற்றுமுழுதான தள்ளுபடியாகச் செயற்பட மாட்டாது என்பதுடன், அவற்றின் ஏதேனும் தனி அல்லது பகுதியளவிலான பிரயோகம் அவற்றின் வேறேதும் அல்லது மேலதிக பிரயோகத்தையோ அல்லது வேறேதும் உரிமை, அதிகாரம் அல்லது சலுகையின் பிரயோகத்தையோ தடுக்க மாட்டாது. இதன் கீழ் வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள ஏதேனும் பரிகாரங்கள், வேறேதும் பரிகாரத்திலிருந்து தனித்தியங்கும் நோக்கத்தைக் கொண்டவையல்ல. சகல பரிகாரங்களும் ஒட்டுமொத்தமானவை. அவை, இதன்கீழ் அல்லது இப்போதோ இனிமேலோ சட்டத்தின் பிரகாரம் அல்லது வேறேதும் வழியில் சட்டத்தில் அல்லது நியாயமான நடத்தை தொடர்பில் வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு பரிகாரத்திற்கும் மேலதிகமானவை.

36. சேவைகள் தொடர்பில் அல்லது ஒரு கணக்கு சம்பந்தமாக வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டிய அல்லது வங்கிக்கு வருமதியாகவுள்ள சகல கொடுப்பனவுகள் அல்லது தொகைகளும் (கட்டணங்கள், கிரயங்கள், அறவீடுகள், வட்டி மற்றும் செலவுகளும் உட்படும்) காலத்திற்குக் காலம் ஏற்புடையனவாக இருக்கக்கூடிய வட்டிகள் நீங்கலானவையாகும். வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டிய அல்லது வங்கிக்கு வருமதியாகவுள்ள சகல கொடுப்பனவுகள் அல்லது தொகைகளும் தெளிவானவையாகவும் வரியின் பேரிலான அல்லது அது போன்ற ஏதேனும் தற்போதய அல்லது எதிர்கால வரிகள் அல்லது அறவீடுகள் தொடர்பான கழிவு அல்லது இடைநிறுத்திவைப்பு அல்லது கொடுப்பனவு அற்றவையாகவும் இருக்க வேண்டும். வரியின் பேரிலான அல்லது ஏதேனும் தற்போதய அல்லது எதிர்கால வரிகள் அல்லது அறவீடுகள் தொடர்பான கழிவு அல்லது இடைநிறுத்திவைப்பு அல்லது கொடுப்பனவு ஏற்புடைய சட்டங்கள் அல்லது பிரமாணங்களினால் தேவைப்படுத்தப்படுமாயின், வரியின் பேரிலான அல்லது அது போன்ற அறவீடுகள் தொடர்பான கழிவுகள் அல்லது இடைநிறுத்திவைப்புகள் அல்லது கொடுப்பனவுகள் எதுவுமில்லாமல் வங்கிக்கு எவ்வளவு கிடைத்திருக்க வேண்டுமோ அத் தொகை முழுவதும் வங்கிக்குக் கிடைப்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் கணக்கு வைப்பாளர்/கள் தமது கொடுப்பனவை அதிகரிக்க வேண்டும் அல்லது மேலதிக தொகையொன்றை வங்கிக்குச் செலுத்த வேண்டும். வங்கி வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில், வாடிக்கையாளர் ஏற்புடைய கழிவு அல்லது இடைநிறுத்திவைப்பு அல்லது கொடுப்பனவுக் கடப்பாடுகள் தன்னால் நிறைவேறறப்படுள்ளன என்பதற்குத் திருப்திகரமான சான்றை வங்கிக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய கடப்பாடுகளை நிறைவேற்ற வாடிக்கையாளர் தவறுவதன் காரணமாக, ஏதேனும் அதிகார அமைப்புகளினால் வங்கிக்கு எதிராக விடுக்கப்படக்கூடிய உரிமைக் கோரல்கள் உள்ளிட்ட சகல விளைவுகள் தொடர்பிலும் வங்கியைத் தீங்கிலிருந்து விலக்கிவைக்கவும் வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்கவும் வாடிக்கையாளர் உடன்படுகின்றார்.

37. வாடிக்கையாளர் வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்குவதுடன், சேவைகள் தொடர்பான அல்லது ஒரு கணக்கு சம்பந்தமான வரிக்காக அல்லது வரியின் பேரில் (நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில்) உறப்படுமென அல்லது உறப்பட்டதென வங்கியினால் தீர்மானிக்கப்படும் ஏதேனும் இழப்பு, பொறுப்பு அல்லது செலவுக்கு சமமான ஒரு தொகையையும் அதனுடன் தொடர்புடைய ஏதேனும் வட்டி, தண்டம், கிரயம் அல்லது செலவையும் வங்கிக்கு வழங்க வேண்டும்.

38. சேவைகளை வழங்குதல் அல்லது இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளை அமுல்செய்தல் தொடர்பாகவும் வங்கிக்குச் சேர வேண்டிய ஏதேனும் தொகைகளை அல்லது எதேனும் சட்ட நடவடிக்கைகளின் பேரில் வங்கியினால் உறப்பட்ட தொகைகளை மீட்பதற்காகவும் ஏதேனும் விதத்தில் ஏற்பட்ட கிரயங்கள் மற்றும் செலவுகள் (சட்டக் கட்டணங்களும் உட்படும்) அனைத்திற்கும் எதிராக வங்கிக்குப் பூரண இழப்பெதிர்காப்பு வழங்க கணக்கு வைப்பாளர்/கள் இணங்குகின்றனர்.

39. வங்கியானது எந்த நேரத்திலும் அதன் ஏதேனும் அல்லது சகல உரிமைகள் அல்லது கடப்பாடுகளையும் கணக்கு வைப்பாளரின்/வைப்பாளர்களின் இணக்கம் இல்லாமலே, வேறொரு நபருக்கு ஒப்படைக்க அல்லது கைமாற்ற முடியும். கணக்கு வைப்பாளர்/ வைப்பாளர்கள் தமது ஏதேனும் உரிமையை அல்லது கடப்பாட்டை, வங்கியின் எழுத்துமூல முன்னனுமதி இல்லாமல், வேறொருக்கு நபருக்கு ஒப்படைக்க அல்லது கைமாற்ற முடியாது.

40. தவிர்க்க முடியாத சூழ்நிலை – தொலைத்தொடர்புகளின், தரவுத் தொடர்பாடல்களின் மற்றும் கணனி அமைப்புகள் மற்றும் சேவைகளின் தவறுகை, செயலிழப்பு அல்லது கிடையாமை, யுத்தம், உள்நாட்டுக் குழப்பம், அரசாங்க நடவடிக்கை, வேலைநிறுத்தங்கள், கடவடைப்புகள் அல்லது வேறு தொழில்சார் நடவடிக்கைகள் அல்லது (சம்பந்தப்பட்ட தரப்புகளின் அல்லது ஒரு மூன்றாம் தரப்பின் ஊழியர்கள் ஈடுபடும்) வர்த்தகப் பிணக்குகள் உள்ளிட்ட (ஆனால், அவை மட்டுமல்ல) காரணங்களினால் ஏற்படும் நியாமான கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிலைமைகளின் நிமித்தம் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழான கடப்பாடுகளில் எதையேனும் நிறைவேற்றுவது தொடர்பில் தாமதம் அல்லது தவறுகை இடம்பெறுமாயின், எந்தத் தரப்பும் பொறுப்பாளியாக்கப்பட மாட்டாது. இந்த வகையான ஏதேனும் தாமதம் அல்லது தவறுகை இந்த நிபந்தனைகளின் ஒரு மீறுதலாகக் கருதப்பட மாட்டாது. பாதிக்கப்பட்ட கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான காலப்பகுதி, சூழ்நிலைக்கேற்றவாறு, ஒரு குறிப்பிட்ட காலத்தினால் நீடிக்கப்படும்.

**41.** நிதி நிறுவனங்களின் அனுமதிப்பத்திரம் இரத்துச்செய்யப்படுவதன் அல்லது இடைநிறுத்தப்படுவதன் காரணமாக வைப்பாளர்களுக்கு ஏற்படக்கூடிய இழப்புகளில் இருந்து அவர்களை முழுமையாக அல்லது பகுதியளிவில் பாதுகாப்பதற்கு இலங்கை மத்திய வங்கியினால் (CBSL) அமுல் செய்யப்படும் ஒரு செயன்முறையே இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் (SLDIS) ஆகும். த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டெட்டின் இலங்கைக் கிளை SLDIS அமைப்பில் அங்கத்துவம் வகிக்கின்றது. ஆகவே, கோரல் வைப்பு/கள், கால வைப்பு/கள், அல்லது சேமிப்பு வைப்பு/களை வைத்திருக்கும் தகுதியுள்ள கணக்கு வைப்பாளர் ஒவ்வொருவருக்கும், இலங்கை மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் விதத்திலும் SLDIS திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைவாகவும் கணிக்கப்படும் இ.ரூ.1,100,000/-க்கு மேற்படாத ஒரு தொகை இழப்பீடாக வழங்கப்படும். கூட்டுக் கணக்கு வைப்பாளர்களைப் பொறுத்தவரையில், தகுதியுள்ள ஒவ்வொரு கூட்டுக் கணக்கு வைப்பாளரும் ஒரு புறம்பான வைப்பாளராகக் கருதப்பட்டு, ஒவ்வொருவருக்கும் CBSLஇனால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் விதத்தில் இ.ரூ.1,100,000/-க்கு மேற்படாத இழப்பீடு வழங்கப்படும்.

காலத்திற்குக் காலம் இற்றைப்படுத்தப்படும் SLDIS பற்றிய மேலதிக விபரங்களை அறிய, www.cbsl.gov.lk/sri-lanka-deposit-insurance-schemeஐ பார்க்கவும்.

**42. முடிவுறுத்தலின் பின்பும் நிலைத்திருக்கும் தன்மை**

வாடிக்கையாளருக்கான ஏதேனும் சேவைகளின் வழங்கலை HSBC அல்லது HSBC குழுமத்தின் ஏதேனுமொரு அங்கத்தவர் முடிவுறுத்தினாலும் வாடிக்கையாளரின் ஏதேனும் கணக்கு மூடப்பட்டாலும் அத்தகைய முடிவுறுத்துகையைப் பொருட்படுத்தாமல், இந்த விதிகள் தொடர்ந்து செல்லுபடியாகும்.

**விதிமுறைகளுக்கான திருத்தங்கள்**

43. சட்டத்தினால், அரசாங்கப் பிரமாணங்களினால் அல்லது இலங்கை மத்திய வங்கியின் அல்லது வேறேதும் சட்டபூர்வ அதிகாரசபையின் அறிவுறுத்தல்களினால் ஏதேனும் திருத்தங்கள் தேவைப்படுத்தப்படுமாயின், இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் அதற்கேற்றவாறு தன்னியல்பாகவே திருத்தப்படும்.

**44.** கணக்கு வைப்பாளர் (வைப்பாளர்கள்) இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள சகல விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் முழுமையாகவும் சமமான முறையிலும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். இந்த விதிகளுக்கான ஏதேனும் திருத்தங்கள் வங்கியின் சகல கிளைகளிலும் சுய சேவை நிலையங்களிலும் உள்ள விளம்பரப் பலகைகளிலும் ஏனைய பொது இடங்களிலும் என்ற வங்கியின் www.hsbc.com.lk என்ற வலைத்தளத்திலும் பார்வைக்கு வைக்கப்படும் மற்றும்/அல்லது விபரக்கூற்றுச் செய்தி மூலமும் அறிவிக்கப்படும். அவை கணக்கு வைப்பாளருக்கு/வைப்பாளர்களுக்கு முறைப்படி வழங்கப்பட்ட அறிவித்தலாகக் கருதப்படும். திருத்தம் செய்யப்பட்ட விதிகளின் பிரதியொன்று தேவைப்பட்டால், கணக்கு வைப்பாளர்/கள் வங்கியின் கிளையொன்றில் அதனைக் கேட்டுப் பெறலாம்.

**45.** கணக்கு ஒன்றை ஆரம்பிக்கும் அல்லது தொடர்ந்து பேணும் எவரும் இந்த விதிகளையும், பொருத்தமுடைய வேறேதும் விதிகள் மற்றும் நிபந்தனைகளைும் வாசித்து, விளங்கிக்கொண்டு பணிந்தொழுகுவதற்கு உடன்பட்டுள்ளவராகக் கருதப்படுவார். கணக்கை/கணக்குகளை ஆரம்பிக்கும்போது, விண்ணப்பப் படிவத்தில் இதற்கான பிரகடனம் ஒன்று செய்யப்பட வேண்டும்.

**46. ஆளுகைச் சட்டம் மற்றும்**

இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் இலங்கையின் சட்டங்களுக்கு அமைவானவையாகக் கருதப்படுவதுடன், அவற்றினால் ஆட்சி செய்யப்படும். சம்பந்தப்பட்ட விடயத்தில் வேறெந்த நீதிமன்றம் சமகால நியாதிக்கத்தை கொண்டிருந்தாலும், சகல சர்ச்சைகளும் இலங்கை நீதிமன்றங்களின் பிரத்தியேக நியாயாதிக்கத்திற்கு உட்பட்டிருக்கும்.

**47. விதிகளின் மொழிபெயர்ப்புக்கள்**

இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் சிங்களம் மற்றும் தமிழ் மொழிபெயர்ப்புகளாகவும் கிடைக்கும். அவற்றிற்கும் ஆங்கில மூல வாசகத்திற்கும் இடையே ஏதாவது முரண்பாடு காணப்படின் ஆங்கில வாசகமே சரியானதாக மேலாதிக்கம் செலுத்தும்.

**48. முறைப்பாடுகளின் கையாளுகை**

கணக்கு வைப்பாளர்/வைப்பாளர்கள் வங்கியிடம் முறைப்பாடுகளைச் செய்ய உரிமை கொண்டுள்ளார். அத்தகைய முறைப்பாடுகள் வாய் மூலம் அல்லது எழுத்து மூலம் வங்கியின் கிளை ஒன்றிற்கு அல்லது வங்கியின் அழைப்பு நிலையத்திற்குப் பின்வரும் வழியில் தெரிவிக்கப்படலாம்:

தபால் முகவரி: முகாமையாளர், வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் உறவுகள், HSBC, இல.24, சேர் பரன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 1.

பிரிமியர் விசாரணைகளுக்கு

மின்னஞ்சல்: premiercustomersolutions@hsbc.com.lk

உடனடித் தொலைபேசி: +94 114472272

தனிப்பட்ட வங்கிச் சேவை விசாரணைகளுக்கு

மின்னஞ்சல்: customersolutions@hsbc.com.lk

உடனடித் தொலைபேசி: +94 114472200

கிறெடிட் கார்ட் விசாரணைகளுக்கு

மின்னஞ்சல்: creditcards@hsbc.com.lk

உடனடித் தொலைபேசி: +94 114472200

மேலதிக உதவிக்கு, தயவுசெய்து பிரவேசிக்கவும் https://www.hsbc.lk/help/

- கணக்கு வைப்பாளர்(கள்) எந்தவொரு HSBC கிளைக்கும் சென்று அதற்குப் பொறுப்பான முகாமையாளரைச் சந்திக்கலாம் அல்லது கிளையில் பெறக்கூடிய "உங்கள் கருத்துகளுக்குச் செவிமடுத்தல்" படிவத்தை நிரப்புவதன் மூலம் வங்கி பற்றிய தனது/தமது கருத்துக்களை வழங்கலாம்.
- கணக்கு வைப்பாளர் தனது பிரச்சினை குறித்து நேரடியாக தனது உறவு முகாமையாளருடன் அல்லது வங்கியின் கிளை அலுவலர் ஒருவருடன் பேசவும் முடியும்.

ஒரு முறைப்பாடு கிடைக்கப்பெற்றதும், அதனைப் பெற்றவர் அந்த முறைப்பாட்டை விசாரணை மற்றும் அடுத்த நடவடிக்கைக்காக வங்கியின் உரிய திணைக்களத்திற்கு அல்லது பிரிவுக்கு அனுப்புவார். சகல முறைப்பாடுகளும் வங்கியின் வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் உறவுகள் பிரிவினால் கண்காணிக்கப்பட்டு, முறைப்படியான தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

முறைப்பபாடு கிடைக்கப்பெற்ற திகதியிலிருந்து ஒரு குறிப்பிட்ட நியாயமான காலப்பகுதிக்குள் வங்கியானது வாடிக்கையாளருக்குப் பதிலளிக்கும். இக் காலப்பகுதிக்குள் முறைப்பாடு தொடர்பான விசாரணையைப் பூர்த்திசெய்ய வங்கிக்கு முடியாதிருந்தால், முறைப்பாட்டிற்கான பூரண பதில் வழங்கப்படும் வரை ஓர் இடைக்காலப் பதிலை இக் காலப்பகுதிக்குள் வங்கி வழங்கும்.

தெரிவிக்கப்பட்ட முறைப்பாடு நியாயமானதென வங்கி கருதினால், சம்பந்தப்பட்ட பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளை வங்கி தனது இறுதிப் பதிலில் கணக்கு வைப்பாளருக்கு அறிவிக்கும்.

கணக்கு வைப்பளர்(கள்) முன்வைக்கும் பிரச்சினைகளை அவருக்குத் திருப்தியளிக்கும் விதத்தில் தீர்த்துவைக்கவே வங்கி எப்போதும் விரும்புகிறது. எனினும், கணக்கு வைப்பாளர்(கள்) விரும்பினால் நிதித்துறை ஆலாட்சி அதிகாரியின் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு அவரது/அவர்களது பிரச்சினைகளுக்கு நிவாரணம் கோரலாம். நிதித்துணை ஆலாட்சி அதிகாரியின் அலுவலகம் என்பது ஒரு சுயாதீன, நடுநிலை மற்றும் இலவச சேவை அமைப்பாகும். 2002ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நிதித்துறைச் சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக அது ஏற்படுத்தப்பட்டது.

நிதித்துறை ஆலாட்சி அதிகாரியின் அலுவலகம் - இலங்கை,
143ஏ, வஜிரா வீதி, கொழும்பு 05
தொலைபேசி : +94 112 595 624 / +94 112 595 625
தொலைநகல் : +94 112 595 625
மின்னஞ்சல் : fosril@sltnet.lk
வலைத்தளம் : www.financialombudsman.lk

இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் ஆங்கில, சிங்கள, தமிழ் பிரதிகள் வங்கியின் வலைத்தளத்தில் (www.hsbc.lk) கிடைக்கின்றன. அச்சு வடிவத்தில் அவற்றை வங்கியின் அலுவலகங்களில் அல்லது கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம.

**GENAA03-04/2024 (T)**

ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட் - ஸ்ரீலங்கா, இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கியாகும்.

இது த ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட் - ஸ்ரீலங்காவின் வெளியீடு.